முச்சந்தி முரளி



"அப்ப இனி
பறவையளை கண்டாலே
பயத்தில
பறந்தோடப்போயினம்
பாருங்கோ"

Registered as a Newspaper

பக்கங்கள் - 12

விலை - ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 216

சனிக்கிழமை
29 ஜூன் 2024

ஆ 15 ஆம்
வ ண்டு 2055



# இலங்கையிலும் பறவைக்காய்ச்சல்!

## பெருந்தொற்றுக்கு சாத்தியம்?

கொழும்பு, ஜூன் 29

**இலங்கையில் பறவைக்காய்ச்சலை ஏற்படுத்தும் 'இன்புளுவன்சா' தொற்றுடன் ஒருவர் அடையாளம் காணப்பட்டுள்ளார். இது இலங்கை மற்றொரு பெருந்தொற்றுக்கு உட்படுகின்றதா? என்ற ஐயப்பாடுகளை ஏற்படுத்தியுள்ளது.**

11

# சிறீதரன் எம்.பி. வீட்டுச்சூழலில் வாள்வெட்டுக்குழு அட்டகாசம்!

யாழ்ப்பாணம், ஜூன் 29

யாழ். இந்து ஆரம்பப் பாடசாலைக்கு முன்புறமாக, சிறீதரன் எம்.பி.யின் வீட்டுச் சூழலில் வன்முறைக் குழுவொன்று நேற்று நடமாடித் திரிந்துள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரனின் இல்லம் அமைந்துள்ள ஒழுங்கையில் அச்சுறுத்தல் விடுக்கும் வகையில் ஐந்துக்கும் மேற்பட்ட மோட்டார்சைக்கிள்களில் வாள் கள் மற்றும் கோடரிகளுடன் குழுவொன்று நேற்று நடமாடித் திரிந்துள்ளது. இது தொடர்பில் பொலிஸாரிடம் முறையிடப்பட்டுள்ள நிலையில், மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (அ-ம-26-125-66)

## ஹெரோய்னுடன் மூவர் கைது!



யாழ்ப்பாணம், ஜூன் 29

மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இருவேறு பகுதிகளில், ஹெரோய்ன் போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் இளைஞர்கள் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மானிப்பாய் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின்போதே மேற்படி மூவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

உடுவில் பகுதியில் வைத்து இரண்டு இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களில் ஒருவரிடமிருந்து 120 மில்லிகிராம் ஹெரோய்னும் மற்றையவரிடம் இருந்து 110

11

## வன்முறையாளி போலிஸால் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 29

யாழ்ப்பாணத்தில் அண்மைக்காலமாகத் தொடர்ச்சியாக இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களுடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபர் யாழ்ப்பாணப் பிராந்தியக் குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸாரால் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்

11



## ஹிருணிகாவுக்கு கடூழியச் சிறை!

கொழும்பு, ஜூன் 29

ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினரும், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான ஹிருணிகா பிரேமச்சந்திரவுக்கு மூன்று வருட கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

2015 ஆம் ஆண்டு கொழும்பு தெமட்டகொட பகுதியில் இளைஞன் ஒருவரை, டிபெண்டர் வாகனத்தில் கடத்திச் சென்ற வழக்கில் குற்றவாளியாக அடையாளம் காணப்பட்டதைத் தொடர்ந்தே, கொழும்பு மேல் நீதிமன்றத்தால் அவருக்கு மூன்றாண்டுகள் கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. (அ-ம)

பொருளாதாரம் மீண்டிராதுவிடின்

## படுகொலைகளின் தேசமாக இலங்கை மாறியிருக்கும்!

ஜனாதிபதி ரணில் உரை

கொழும்பு, ஜூன் 29

பொருளாதாரப் பிரச்சினை காரணமாக கென்யா கடும் நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளது. அதனால் அங்கு படுகொலைகளும் இடம்பெற்று வருகின்றன.

11

நிறைவேற்று அதிகாரிகளுக்கு

## கொடுப்பனவு அதிகரிப்பு

கொழும்பு, ஜூன் 29

அரச நிறைவேற்று அதிகாரிகளுக்கு வழங்கப்படும் மாதாந்த நிறைவேற்றுக் கொடுப்பனவை அடுத்த மாதம் முதலாம் திகதி முதல் 10 ஆயிரம் ரூபாவால் அதிகரிக்க அரச நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

11

## பஸ் கட்டணத்தை குறைப்பதற்கு முடிவு

கொழும்பு, ஜூன் 29

ஜூலை மாதம் முதலாம் திகதிமுதல் பஸ் கட்டணங்களை 5 வீதத்தால் குறைப்பதற்கு பஸ் சங்கங்கள் தீர்மானித்துள்ளன. போக்குவரத்து அமைச்சில் நேற்று

11

ஜெயசிக்குறு தோல்வியின் பின்னர்

## யாழ்ப்பாணத்தை பொன்சேகாவிடம் ஒப்படைக்கும் முடிவு என்னுடையதே!

ரணில் நேற்றுத் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 29

யாழ்ப்பாணத்தில் ஜெயசிக்குறு இராணுவ நடவடிக்கை தோல்வியைத் தழுவியதால் இராணுவம் கைப்பற்றிய பலவற்றை இழக்க நேரிட்டது. யாழ்ப்பாணத்தை

11

## நாமல் ராஜபக்சவே பிரதமர் வேட்பாளர்!

உதயங்க அழுத்தம்திருத்தம்

கொழும்பு, ஜூன் 29

அடுத்த பொதுத்தேர்தலில் பிரதமர் வேட்பாளராக தேர்தலை நாமல் ராஜபக்சவே வழிநடத்துவார் என்று ராஜபக்ச குடும்பத்தின் பேச்சாளராகக் கருதப்படும் ரஷ்யா

11

# கொக்குத்தொடுவாய் அகழ்வு; ஜூலை 4 மீளவும் ஆரம்பம்!

யாழ்ப்பாணம், ஜூன் 29

முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழி அகழ்வுப் பணிகள், ஜூலை மாதம் 4 ஆம் திகதி மீளவும் ஆரம்பிக்கப்படவுள்ளன.

கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழியில் இரண்டு கட்டங்களாக அகழ்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. முதற்கட்ட அகழ்வுப் பணிகள் கடந்த வருடம் செப்ரெம்பர் மாதம் 6 ஆம் திகதி முன்னெடுக்கப்பட்டன. இதன்போது 17 உடற்பாகங்கள் மீட்கப்பட்டன. அகழ்வின் இரண்டாம் கட்டப் பணிகள் கடந்த நவம்பர் மாதம் 20 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்டன. இதன்போது 40 மனித எச்சங்கள் மீட்கப்பட்டன. இதைவிட சயனைட் குப்பிகள், விடுதலைப் புலிகளு

11

மக்கள் ம... தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது கண்ணீருக்கு ஆளாகி வெற்றியை அடையமுடியாது

## காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் உருக்கம்

கொழும்பு, ஜூன் 29

**சர்வதேச நாடுகளை ஏமாற்றிவிடலாம். ஆனால், காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைத்தேடும் தாய்மாரின் கண்ணீரையும், அவர்களின் துயரங்களையும் நீங்கள் ஏமாற்றி ஒருபோதும் வெற்றிபெறமுடியாது. இந்தக் கண்ணீருக்கு என்றோ ஒருநாள் பதில் சொல்லியே ஆகவேண்டும் என்று மன்னார் மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் கண்ணீர்மல்க தெரிவித்துள்ளனர்.**




மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளால் நேற்று வெள்ளிக்கிழமை மன்னார் மாவட்டச் செயலகத்துக்கு முன்பாக கவனவீர்ப்புப் போராட்டமொன்றுமுன்னெடுக்கப்பட்டது. இதில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர்கள் இதனைக் குறிப்பிட்டனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்;

கடந்த 15 வருடங்களுக்கு மேலாக எமது உறவுகளைத்தேடி வீதியில் இறங்கிப் போராடி வருகிறோம்.

14 ஆணைக்குழுக்களை மாறிமாறி அரசாங்கம் இந்த நாட்டில் கொண்டு வந்துள்ளது. இந்தநாட்டில் உண்மையும் ஒற்றுமையும் இருந்திருந்தால் தமிழ் மக்களுக்கு இவ்வாறான ஒரு துயரம் நிகழ்ந்திருக்காது.

தற்போது அரசாங்கத்திடம் இருந்து நீதியைப் பெற்றுத்தருமாறு சர்வதேசத்திடம் நாங்கள் மண்டியிட்டு கேட்டு நிற்கின்றோம்.

மாறிமாறி வருகின்ற அரசாங்கம் 14 ஆணைக்குழுக்களை இந்த நாட்டில் கொண்டு வந்துள்ளது. இந்த நாட்டில் உண்மையும் ஒற்றுமையும் இருந்திருந்தால் தமிழ் மக்களுக்கு இவ்வாறான ஒருதுயரம் நிகழ்ந்திருக்காது.

எங்களின் கண்ணீருக்கு நீங்கள் ஒரு நாள் பதில் சொல்லியே ஆகவேண்டும் - என்றனர். (ச-56-60)

## முதலாம் தரத்துக்கு மாணவர் உள்ளீர்ப்பு

கொழும்பு, ஜூன் 29

எதிர்வரும் 2025ஆம் ஆண்டுக்கான முதலாம் தரத்துக்கு மாணவர்களை உள்வாங்குவது தொடர்பான சுற்றறிக்கை கல்வி அமைச்சால் வெளியிடப்பட்டுள்ளது.

விண்ணப்பப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி ஜூலை மாதம் 31ஆம் திகதியாகும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## காப்பெற் வீதியாக மாறும் வவு. பண்டாரிக்குளம் வீதி

வவுனியா, ஜூன் 29

நீண்டகாலமாகப் புனரமைக்கப்படாதிருந்த வவுனியா - பண்டாரிக்குளம் பிரதான வீதியின் புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வவுனியா அபிவிருத்தி குழுத்தலைவரும், வன்னி நாடாளுமன்ற உறுப்பினருமான கு.திலீபனின் நிதியொதுக்கீட்டில் இந்தவீதி காப்பெற் வீதியாக மாற்றப்படவுள்ளது.

1.9 கிலோ மீற்றர் நீளத்தைக் கொண்ட இந்த வீதி 30. 3 மில்லியன் ரூபா செலவில் புனரமைப்பு செய்யப்படவுள்ளது. (ச-25-18)



## நாமலுக்கான நேரம் இதுவல்ல!

இது நாமல் ராஜபக்சவுக்கான நேரம் அல்ல, எனவே, ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்கும் முடிவை எடுக்கவேண்டும் என்று ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

முதல் காலாண்டில் இலங்கையின் பொருளாதாரம் வளர்ச்சி கண்டுள்ளது. எனவேஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்கும் முடிவை பெரமுனக் கட்சி எடுக்க வேண்டும் என்றும் தெரிவித்தார். (ச-44)

## பொலிஸ் அடக்குமுறை காட்டுமிராண்டித்தனம்!

கொழும்பு, ஜூன் 29

திருகோணமலை, மூதூர் - இருதயபுரம் பகுதியில் மதுபானசாலைக்கு எதிராகப் போராடிய மக்களை இரவுவேளையில் கைதுசெய்த பொலிஸாரின் செயல் காட்டுமிராண்டித்தனமானது.

-இவ்வாறு ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பு வலியுறுத்தியுள்ளது.

மதுபான எஜமானர்களுக்காக தமது சமூகத்தின் நல்வாழ்வுக்காகப் போராடிய மக்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

உயரிய நோக்கத்துக்காகப் போராடும் மக்களோடு நாம் தோள் நிற்போம் என்றும் ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பு குறிப்பிட்டது. (ச-66)

## புதிய ஆட்சியின்போது மலையகம் மாறவேண்டும்

### மனோ எம்.பி. சுட்டிக்காட்டு



அடுத்துவரும் ஆட்சி மாற்றத்தையடுத்து, ஒட்டுமொத்த பெருந்தோட்டத்துறையும் பரிணமிக்கவேண்டும். அதற்கான முன் தயாரிப்பு பணிகளில் நாம் ஈடுபட்டுள்ளோம் என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பெருந்தோட்ட நிலங்களில், வதிவிட காணி உரிமை, வாழ்வாதார காணி உரிமை உள்ளிட்ட உரிமைகளைப் பெற்றுத்தந்து அவர்களை இந்தநாட்டின் முழுமையான பிரஜைகளாக்கும் கொள்கையை தமிழ் முற்போக்குக் கூட்டணி முன்னெடுக்கின்றது.

அதற்கான பலம் மற்றும் தூரப்பார்வை எம்மிடம் உள்ளது. அடுத்த ஆட்சி மாற்றத்துக்கு உள்ளே சென்று திட்டங்களை வகுப்பதைவிட, முன்கூட்டியே முன் தயாரிப்பு நடவடிக்கைகளில் தற்போது நாம் ஈடுபட்டுள்ளோம். அடுத்த ஆட்சிமாற்றத்தினூடாக மலையக மக்களின் இன்னல்கள் தீர்க்க வழிவகுப்போம் - என்றார். (ச-இ)

## கிராமப்புற வாக்குகள் சஜித்துக்கு அதிகம்

### கருத்துக்கணிப்பில் தகவல்

கடந்த முறை ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சிக்குச் சார்பாக இருந்த கிராமப்புற வாக்கு வங்கியில் பெரும்பாலான ஆதரவை இம்முறை சஜித் பிரேமதாஸ பெறுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

புலனாய்வுப் பிரிவுகளால் கையளிக்கப்பட்டுள்ள அறிக்கைகளின் பிரகாரமும் தற்போதைய சூழ்நிலையில் சஜித் பிரேமதாஸவே முன்னிலையில் இருக்கின்றார் எனக் கூறப்படுகின்றது.

எனினும், இது உறுதியான - இறுதியான முடிவாக அமையாது எனவும், தேர்தலில் யாருக்கு வாக்களிப்பது என்ற குழப்பத்தில் இம்முறை மக்கள் உள்ளனர் என்றும் தெரியவருகின்றது.

எதிர்வரும் ஓகஸ்ட் மாத இறுதியில் அல்லது செப்ரெம்பர் மாத முதல்வாரத்தில் கிடைக்கப்பெறும் கருத்துக் கணிப்பே நம்பகத்தன்மைமிக்கதாக அமையும் என்றும் கூறப்படுகிறது. (ச-25-44)

## சுகாதாரக் குறைபாடு 64,000 ரூபா தண்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 29

சுன்னாகம், இணுவில் பகுதியில் சுகாதாரச் சீர்கேட்டுடன் உணவு கையாளும் நிலையங்களை நடத்திய உரிமையாளர்களுக்கு 64 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

இணுவில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் மருதனார்மடம், சுன்னாகம் பகுதிகளிலுள்ள உணவுக் கையாளும் நிலையங்கள் அண்மையில் திடீர்ப் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டன.

இதன்போது உணவகம் மற்றும் பேக்கரி உற்பத்திப் பொருள் விற்பனை நிலையம் என்பன சுகாதாரக் குறைபாடுகளுடன் இயங்கி வந்தமை கண்டறியப்பட்டது.

அதனையடுத்து உரிமையாளர்களுக்கு எதிராக வழக்குப் பதிவு செய்யப்பட்டு, மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர்.

அவர்கள் குற்றத்தை ஏற்றுக்கொண்டதையடுத்து ஒருவருக்கு 54 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டதுடன் கடையை சீல்வைத்து மூடுமாறும் மற்றையவருக்கு 10 ஆயிரம் ரூபா தண்டமும் நீதிமன்றால் விதிக்கப்பட்டது. (ச-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நாட்டின் சுபீட்சத்துக்கு ரணிலை விரட்டுவோம்

### மக்கள் போராட்ட இயக்கம் அறைகூவல்

**கொழும்பு, ஜூன் 29**

**இந்த நாடு சுபீட்சமாக இருக்கவேண்டுமெனில் ரணில் தலைமையிலான அரசாங்கத்தை விரட்டியடிக்கவேண்டும் என்று மக்கள் போராட்ட இயக்கத்தின் பிரதிநிதி வசந்த முதலிகே தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்;

சர்வதேச நாணயநிதியத்தின் ஊடாக கடன் வழங்குநர்களுடன் ஏற்படுத்திக்கொண்ட உடன்பாடுகள் குறித்து ஜனாதிபதி தனது உரையில் விளக்கமளித்துள்ளார்.

2043ஆம் ஆண்டுவரை கடன் செலுத்தல்களை மறுசீரமைப்பதற்கான அனுமதிகள் கிடைக்கப் பெறும் எனக் கூறினார்.

இன்று நாட்டில் 26 வீதமான குழந்தைகள் ஊட்டச்சத்துக் குறைபாட்டால் அவதிப்படுகின்றனர். மேலும், 30 வீதமானவர்கள் கடுமையான ஏழ்மை நிலையில் உள்ளனர். 36 வீதமானோர் வேலையில்லாமல் உள்ளனர். வளங்கள் விற்கப்பட்டு நாடு அழிக்கப்படுகிறது. ரணில் கடன் வாங்கியே வெற்றி கண்டுள்ளார். இதனால் மக்கள் எப்படி மகிழ்ச்சியாக இருக்கமுடியும்? ரணில் விரட்டியடிக்கப்படுவதே மக்களுக்கு மகிழ்ச்சியான செய்தியாக இருக்கமுடியும்- என்றார். (ச-இ)

## உள்ளூராட்சிப் பணியாளர்களுக்கு விரைவில் நிரந்தர நியமனம்

கொழும்பு, ஜூன் 29

உள்ளூராட்சி நிறுவனங்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கு நிரந்தர ஓய்வூதியத்துடன் நியமனங்களை வழங்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

உள்ளூராட்சி நிறுவனங்களில், தற்காலிக, சாதாரண, மாற்று, ஒப்பந்தம் மற்றும் சலுகை அடிப்படையில் பணிபுரியும் பணியாளர்களுக்கே குறித்த நியமனங்கள் வழங்கப்படவுள்ளன.

அதற்கமைய நாடளாவிய ரீதியில் உள்ளூராட்சிச்சபைகள், நகரசபைகள் மற்றும் மாநகரசபைகளில் தற்காலிக, சாதாரண, மாற்று, ஒப்பந்த மற்றும் சலுகை அடிப்படையில் பணியாற்றும் 8 ஆயிரத்து 435 பேர் நிரந்தர நியமனம் பெறவுள்ளனர்.

இந்த நியமனக் கடிதங்கள் ஜூலை மாதத்தில் அனைவருக்கும் வழங்குவதற்கு முடிவுசெய்யப்பட்டுள்ளது என்று பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார். (ச-இ)

## ஐந்து மாதங்களில் சூரியசக்தி மின்னுற்பத்தி; 132 மெகாவாட்ஸ் சேமிப்பு

கொழும்பு, ஜூன் 29

சூரியசக்தி மின் உற்பத்தி மூலம் இந்த ஆண்டின் முதல் ஐந்து மாதங்களில் 132 மெகாவாட்ஸ் மின்சாரம் தேசிய மின் இணைப்புடன் இணைக்கப்பட்டுள்ளது என்று மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்துள்ளார்.

2024ஆம் ஆண்டின் இறுதிக்குள் இலங்கை, மொத்தக் கொள்ளளவான 1,251 மெகாவாட்ஸ் திறனை அடையும் என எதிர்பார்க்கப்படுகிறது என்றும் அவர் தெரிவித்தார். (ச-இ)

## பெரமுன ஆதரவுக்கு அரசு கொடுப்பனவு?

கொழும்பு, ஜூன் 29

அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு ஆதரவைப் பெறுவதற்காக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன உறுப்பினர்களுக்கு மேலதிகமான கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது எனத் தகவல்கள் கசிந்துள்ளன. பெரமுனவின் 21 நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அரசாங்கத்தின் பலம்வாய்ந்த நபரொருவரின் தலையீட்டினூடாக மாதாந்தக் கொடுப்பனவாக தலா இரண்டு இலட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

## இரு பருவங்கள் உரம் இலவசம்



கொழும்பு, ஜூன் 29

நெற்பயிர்ச்செய்கையை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு இரண்டு பருவங்களுக்கு உரம் இலவசமாக வழங்கப்படுமென விவசாய பெருந்தோட்ட உற்பத்தி அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இளைஞர் விவசாய கழகங்களினூடாகவே இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

இதற்கென 25 மாவட்டங்களிலும் 160 கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. ஒவ்வொரு கிராமத்துக்கும் பத்து மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் விவசாய அமைச்சர் தெரிவித்துள்ளார். (ச-25-6)

# நாயால் கடியுண்டால் உடன் சிகிச்சை தேவை



### மருத்துவர் யமுனாநந்தா அறிவுறுத்து

கொழும்பு, ஜூன் 29

நாய்க் கடித்தால் உடனடியாக மருத்துவ சிகிச்சை பெறவேண்டும்.

இது தொடர்பான விழிப்புணர்வு மக்களுக்குத் தேவை என்று யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை பிரதிப்பணிப்பாளர் மருத்துவர் யமுனாநந்தா தெரிவித்துள்ளார்.

விசர்நாய்க் கடிக்குள்ளான கிளிநொச்சியை சேர்ந்த 4 வயதான சிறுமி கடந்த புதன்கிழமை உயிரிழந்துள்ளார்.

விஷக்கடி தீண்டப்பட்டால், 5 நிமிடங்களுக்கு நீராலும் சவர்க்காரத்தாலும் நன்றாகக் கழுவலாம் பின் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லவேண்டும்.

மருத்துவர்களிடம் நாய் அல்லது பூனை தொடர்பாக முழுவிவரத்தைத் தெரிவிக்கவேண்டும். தடுப்பு மருந்து செலுத்தப்பட்ட நாய்கள் கடிக்கும்போது அதில் கிருமிகள் இருக்காது. ஆனால், தெரு நாய்கள் கடிக்கும்போது கொஞ்சம் அவதானமாக இருக்கவேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)




**'து**ன்பப்படுறவங்கள் எல்லாம் அந்தக் கவலையை தெய்வத்திட்ட முறையிடுவாங்கள். ஆனால் தெய்வமே கலங்கி நின்டால் அந்தத் தெய்வத்துக்கு ஆரால ஆறுதல் சொல்ல முடியும்?'

இப்பிடியொரு வசனம் தங்கப்பதக்கம் படத்தில வாற சோதனைமேல் சோதனை என்ட பாட்டில இருக்கு. இப்ப இதே வசனத்தை நல்லூர்க் கந்தன் சொல்லவேண்டிய நிலைமை வந்திட்டுது. யாழ்ப்பாணத்தார் எல்லாரும் வேண்டும் வரம் தாற வேலவனுக்கே இப்ப கோர்ட்டில கேஸ் போட்டிருக்காம். என்னத்துக்கு கேஸ்? வேற என்னத்துக்கு, திருவிழாவில போடுற வீதித்தடைக்கு எதிராத்தானாம்.

நல்லூர்த்திருவிழா தொடங்கப் போகுதென்டாலே நாலுபக்க வீதியும் கோயிலுக்கு அங்கால மறிபட்டு, வாகனமெல்லாம் வேறவழியிலதான் போய்வரும். அந்த வீதித்தடைக்குள்ள வீடு, வாசல், கடைகண்ணி உள்ளவைக்கு மட்டும் பாஸ் குடுப்பினம். சாமி வெளிவீதி சுத்துற நேரம் தவிர, மிச்ச நேரமெல்லாம் அந்தப் பாஸைக்காட்டி அவை தாங்கள் இருக்கிற இடத்துக்குப் போய்வரலாம். ஆனால் பெரிய வாகனங்களை அவை உள்ளுக்க இருந்து வெளியில கொண்டுவரவோ, வெளியில இருந்து உள்ளுக்க கொண்டுபோகவோ ஏலாது. அதோட கோயில் வீதியில திருவிழாக் காலத்தில ஆரும் செருப்போடும் போகேலாது. இதுகளெல்லாம் தங்கட உரிமையைப்பாதிக்குது எண்டு நல்லூர்க் கோயில் சுத்துவட்டாரத்தில குடியிருக்கிற சிலரும், கடைவைச்சிருக்கிற சிலரும் வழக்குப் போட்டிருக்கினமாம்.

திருவிழாக்காலங்களில தாங்கள் வைச்சிருக்கிற பெரிய வாகனங்களை வெளியால வேற ஆரின்ரையும் வீட்டில நிப்பாட்ட வேண்டிக் கிடக்கு எண்டும், செருப்பில்லாமல் நடந்துபோக ஏலாது எண்டும் அவையள் சொல்லியிருக்கினம். ஒருபக்கத்தால பார்த்தால் அவை சொல்லுறதிலையும் நியாயமிருக்குத்தான். சொந்தமா வாகனத்தை வைச்சிருந்தும் அதை வெளியால எங்கையோவிட்டிட்டு, வெறுங்காலோட வீடுவரைக்கும் நடந்துபோக ஒருமாதிரி இருக்கும் தான். ஆனாலும் இன்னொண்டையும் யோசிச்சுப் பாக்கோணும். இதெல்லாம் திருவிழாக் காலத்தில மட்டும்தானே. மிச்சநாள்களில அவையின்ர விருப்பப்படி தங்கட வாகனங்களில இஷ்டப்படி போய்வரலாம்தானே. நல்லூரானுக்காக ஒரு இருபத்தைஞ்சுநாள் இந்தக் கஷ்டத்தை தாங்கமாட்டினமோ? முந்தி ஆமிக்காரன் முழத்துக்கு முழம் போட்ட சென்றியில ஒவ்வொருநாளும் எத்தினை தரம் ஏறி, இறங்கி நடந்திருப்பம். அதுக்கெதிரா ஆரும் கேஸ் போடேலையே. உங்களைக் காக்கிற கடவுளுக்காக இப்பிடி ஒரு தியாகத்தைச் செய்ய மாட்டம் எண்டால், அதை என்னெண்டு சொல்லுறது?

எத்தினையோ வருசமா இதே வீதித்தடைதானே நடைமுறையில இருக்கு. அப்பவெல்லாம் சும்மா இருந்தவை இப்ப மட்டும்மேன் கெம்பிக்கொண்டுபோய் கேஸ் போட்டவை? இப்பிடி அங்க குடியிருக்கிற சிலரையும், கடைக்காரர் சிலரையும் வேற மதத்தைச் சேர்ந்த ஒரு அரசியல்வாதிதான் தூண்டிவிட்டு கூத்துப் பாக்கிறாராம். கடைசியா நல்லூரானை வைச்சும் அரசியல் செய்ய வெளிக்கிட்டினம் பாருங்கோ.



-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செல்லப்பா சுவாமி குருபூசை நாளை

யாழ்ப்பாணம், ஜூன் 29
செல்லப்பா சுவாமிகளின் மாதாந்த குருபூசை தின நிகழ்வு, நல்லூர் தெற்கு வீதியிலுள்ள சுவாமிகளின் நினைவாலயத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு இடம்பெறவுள்ளது. குருபூசையைத் தொடர்ந்து, இணுவில் சோ.பரமசாமி எழுதிய 'குரு வழி நடந்த குணவான்' என்ற நூலின் மீள் பதிப்பு வெளியீடும் இடம்பெறவுள்ளது. (ப)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** மனதில் அவ்வப்போது குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். சிலருக்கு எதிர்பாராத செலவுகளால் கடன் வாங்க நேரிடும். வாழ்க்கைத்துணைவழி உறவுகளிடம் எதிர்பார்த்த காரியம் தாமதமாகும். குடும்பத்தில் சில குழப்பங்கள் ஏற்படும். பாதிப்பு எதுவும் ஏற்படாது.

**இடபம்:** எதிர்பார்த்த உதவி கிடைக்கும். செலவு செய்யவேண்டி வரும். தெய்வப்பணிகளில் ஈடுபடும் வாய்ப்பு ஏற்படும். அக்கம்பக்கத்தில் இருப்பவர்கள் உதவிகரமாக இருப்பார்கள். பிரச்சினைகள் ஏற்பட்டாலும் பாதிப்பு எதுவும் இருக்காது.

**மிதுனம்:** எதிர்பார்த்த பணவரவு தாமதமாகும். சிலருக்கு தந்தையின் மூலம் ஆதாயம் கிடைக்கும். வீண்செலவுகள் ஏற்படும். மகிழ்ச்சி உண்டு. எதிர்பார்த்த காரியம் அலைச்சலையும் செலவுகளையும் ஏற்படுத்தினாலும் முடிந்துவிடும்.

**கடகம்:** உற்சாகமாகக் காணப்படுவீர்கள். உறவினர்கள் மூலம் சுபநிகழ்ச்சிக்கான பேச்சு நல்லபடி முடியும். தாய்வழி உறவுகளால் நன்மை உண்டாகும். எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் நீங்கும். மனதில் துணிச்சலுடன் முடிவெடுப்பீர்கள்.

**சிம்மம்:** தேவையான பணம் கையில் இருக்கும். காரியங்கள் முடிவதில் தாமதம் ஏற்பட்டாலும் முடித்துவிடுவீர்கள். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உறவினர்கள் மூலம் கிடைக்கும் தகவல் மகிழ்ச்சி தரும். சற்றுக் கவனமாக இருக்கவும்.

**கன்னி:** உறவுகளால் பணவரவுக்கு வாய்ப்பு ஏற்படும். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதில் ஆலோசனை அவசியம். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. குடும்பத்தில் சில பிரச்சினைகள் ஏற்படும்.

**துலாம்:** உற்சாகமான நாள். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். உங்கள் முயற்சிகளுக்கு வாழ்க்கைத் துணை ஒத்துழைப்புத் தருவார் புதிய நண்பர்களின் அறிமுகம் கிடைக்கும்.

**விருச்சிகம்:** காரியங்களில் சிறுசிறு தடைகள் ஏற்பட்டாலும் முடிந்துவிடும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. விட்டுக்கொடுத்துச் செல்வது நல்லது. எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும்.

**தனுசு:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். எதிர்பார்த்த பணம் கிடைக்கும். ஆனால், திடீர்ச் செலவுகளால் கையிருப்புக் கரையும். மகிழ்ச்சி ஏற்படும். மனவருத்தங்கள் நீங்கும். பிணக்குகள் நீங்கி அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**மகரம்:** செயல்களில் திட்டமிடுதல் மிகவும் அவசியம். கடன்கள் விஷயத்திலும் சற்றுக் கவனம் செலுத்தவும். தேவையற்ற பிரச்சினைகள் ஏற்படக்கூடும். உடல் ஆரோக்கியம் மேம்படும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகும்.

**கும்பம்:** எதிர்பாராத செலவுகள் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டா கும். புதிய முயற்சிகளை பிற்பகலுக்குமேல் தொடங்கவும். பிரச்சினைகளை சமாளிக்கவேண்டி வரும். காரியங்கள் சாதகமாக முடியும்.

**மீனம்:** எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். செலவுகளும் ஏற்படக்கூடும். உறவினர்கள் வகையில் சிற்சில சங்கடங்களைச் சமாளிக்க வேண்டிவரும். மகிழ்ச்சி தரும் நாள். மற்றவர்களுடன் மனவருத்தம் ஏற்படக்கூடும்.

# மென்பந்து சுற்றுத்தொடர் இறுதி ஆட்டம் இன்று

கிளிநொச்சி, ஜூன் 29
பொலிகை இளைஞர்கள் ஏற்பாடு செய்த, 'பொலிகை கிண்ணம்' எனும் மாபெரும் மென்பந்து துடுப்பாட்டச் சுற்றுத்தொடரின் இறுதி ஆட்டமும் பரிசளிப்பு நிகழ்வும், திக்கம் இளைஞர் விளையாட்டு மைதானத்தில் இன்று சனிக்கிழமை பி.ப. 3.30 மணிக்கு நடைபெறவுள்ளது.
க.ஜெயசீலன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் சமூகசேவகர் அகிலன் முத்துக்குமாரசாமி பிரதம விருந்தினராகவும், சமூகசேவகர் சி.தயாபரன் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்ளவுள்ளனர். (ப-66)

# குருபூசையும் சொற்பொழிவும்

சிறுப்பிட்டி, ஜூன் 29
சைவவாழ்வியலில் திருவாசகம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக சிவஸ்ரீ. பால. திருகுணானந்தக்குருக்கள் ஏற்பாடு செய்த, வாராந்த திருவாசகச் சிறப்புச் சொற்பொழிவும், ஸ்ரீமத் முத்துக்குமார சுவாமிகள் குருபூசையும், திருவருள்மிகு ஸ்ரீ நாகதம்பிரான் ஆலயப் பிரதான மண்டபத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.
சிவநெறிப் பிரகாசர், சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் இடம்பெறவுள்ள நிகழ்வில், ஸ்ரீமத் முத்துக்குமார சுவாமிகள் குருபூசையைத் தொடர்ந்து, 'எல்லோரும் வணங்கும் முத்துக்குமார சுவாமிகள்' என்னும் விடயப் பொருளில் பிரசங்க பூஷணம் சைவப்புலவர் செ. த. குமரன் சொற்பொழிவு ஆற்றுவார். (ப)



புலோலி பார்வதவர்த்தனி அம்பாள் சமேத பசுபதீஸ்வரர் ஆலய வருடாந்த மஹோற்சவம், நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. (ப-66)

# சான்றிதழ் வழங்கல்

யாழ்ப்பாணம், ஜூன் 29
டிபி எடியுகேஷன் அறக்கட்டளை நிறுவுநரும் நாடாளுமன்ற உறுப்பினருமான தம்பிக்க பெரேரா மற்றும் 'மை ட்றீம் அக்கடமி' (my dream accademy) நிறுவுநரும் கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்ற குழுக்களின் பிரதித் தவிசாளருமான அங்கஜன் இராமநாதன் ஆகியோர் இணைந்து ஏற்பாடு செய்த, 'மை ட்றீம்' மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு, முற்றவெளி மைதானத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளது. (ப-25)



# குருதிக்கொடை

யாழ்ப்பாணம், ஜூன் 29
அமரர் தே.நிறோஜ்ஜின் 8 ஆவது ஆண்டு நினைவை முன்னிட்டு, அவரது குடும்பத்தினருடன் விதையனைத்தும் விருட்சமே குழுமம் இணைந்து ஏற்பாடு செய்த, குருதிக்கொடை முகாம் நிகழ்வு, யாழ். போதனா மருத்துவமனை இரத்த வங்கிப் பிரிவில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி முதல் பி.ப. 3 மணி வரை இடம்பெறவுள்ளது. (ப-66)

✪ ✪ ✪ ✪

யாழ்ப்பாணம், ஜூன் 29
மல்லாகம் புனித சதாசகாய அன்னை ஆலய வருடாந்தத் திருவிழாவை முன்னிட்டுப் புனித சதாசகாய அன்னை ஆலய இளையோர் ஒன்றியத்தினரின் ஏற்பாட்டில் மாபெரும் குருதிக்கொடை முகாம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி முதல் ஆலய வளாகத்தில் நடைபெறவுள்ளது.
இந்தக் குருதிக்கொடை முகாம் நிகழ்வில் குருதிக் கொடையாளர்கள் மற்றும் ஆர்வலர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு குருதிக்கொடை முகாம் நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (ச-66)

# 1008 சங்காபிஷேகமும் பாற்குடப் பவனியும்!

யாழ்ப்பாணம், ஜூன் 29
அல்வாய், வேவிலந்தை ஸ்ரீமுத்துமாரி அம்மன் தேவஸ்தானத்தின் மஹா கும்பாபிஷேக தின 1008 சங்காபிஷேகமும் பாற்குடப் பவனியும் இன்று சனிக்கிழமை இடம்பெறவுள்ளது.
அன்னை பராசக்தி ஸ்ரீமுத்துமாரி அம்பாளுக்கும் இன்று காலை 6 மணியளவில் மஹா சங்காபிஷேகமும், 7 மணிக்கு பாற்குடப் பவனியும் நடைபெறவுள்ளன என ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர். (ப-100)

# பஞ்சாபிகேசனின் நூற்றாண்டு விழா

யாழ்ப்பாணம், ஜூன் 29
சாவகச்சேரி மண்ணைச் சேர்ந்த நாதஸ்வர மேதை கலாநிதி கே.எம்.பஞ்சாபிகேசனின் நூற்றாண்டு விழா, சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் எதிர்வரும் திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது.
மருத்துவர் சு.சி.அருளானந்தம் தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறீசற்குணராஜா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (ப-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# மருத்துவமனைகளுக்குள் புகுந்த வன்முறை

ஆலயங்களுக்கு நிகரானவையாக மதிக்கப்படும் இடங்களில் பாடசாலைகளும், மருத்துவமனைகளும் முக்கியமானவை. எமக்கு அறிவூட்டி, நல்ல மனிதர்களாக மாற்றுவதால் பாடசாலைகளும், பிணிகளை நீக்கி தேகாரோக்கியத்தோடு மனிதர்களை வாழவைப்பதால் மருத்துவமனைகளும் கடவுள் உறையும் இடங்களாகக் கொள்ளப்படுகின்றன. உலகில் எல்லா நாகரிகங்களிலும் இவ்விரண்டுக்கும் எப்போதும் மதிப்புக் கொடுப்பது வழமை. ஆலயங்களை இடிக்கும் ஆக்கிரமிப்பாளர்கள்கூட பாடசாலைகள்மீதும், மருத்துவமனைகள்மீதும் கைவைக்கத் தயங்கவே செய்வர். குறிப்பாக மருத்துவமனைகள் உயிரைக்காக்கும் சக்தி கொண்டவை என்பதால், ஆலயம், பாடசாலை என்பவற்றைவிடவும் முக்கியமானதாகக் கொள்ளப்படுகின்றன. அதனால்தான் போர்க்காலங்களில் கூட மருத்துவமனைகளைத் தாக்கக்கூடாது என்ற விதி உண்டு. சிலவேளைகளில் மருத்துவமனை எங்குள்ளது என்பதை அறியாமல் தாக்குதல் நிகழ்ந்துவிடக்கூடாது என்பதற்காக செஞ்சிலுவை அல்லது செம்பிறைக் குறியீடுகள் மருத்துவமனைக் கூரைகளில் பெரிதாக அடையாளப்படுத்தப்படுவதுண்டு. ஆனால், அதையும் மீறி சில தரப்புகள் மருத்துவமனைகளையும் தாக்குவதுண்டு. இலங்கையின் இறுதிப்போரின்போதும், இப்போது காஸாவிலும் மருத்துவமனைகள் மீதும் மிகமோசமான தாக்குதல்கள் நடக்கவே செய்துள்ளன. ஆனால், இவை விதிவிலக்கான சம்பவங்கள் மட்டுமே. பொதுவாகவே மருத்துவமனைகள் அமைதியினையும், உயிர்காக்கும் கருமத்தையும் தொடர்ச்சியாகப் பேணுவதை எல்லா நாடுகளும், எல்லாஅரசுகளும், எல்லாப்படைகளும் உறுதிப்படுத்தவே செய்கின்றன.

இவ்வாறு அமைதியான நதியினிலே ஓடும் ஓடம் போல, உயிர்காக்கும் உன்னதப் பணியைச் செய்து கொண்டிருக்கும் வடக்கு மாகாண மருத்துவமனைகள் அண்மைக்காலமாக வன்முறைக் களங்களாக மாறிக் கொண்டிருக்கின்றன. நோயாளியை அனுமதிக்க வந்தவர்கள் பணியாளர்களை கண்மூடித்தனமாகத் தாக்குவதும், நோயாளியைப் பார்வையிடுவதுபோல வந்தவர்கள் நோயாளிமீது தாக்குதல் நடத்துவதும், விடுதியில் அனுமதிக்கப்பட்ட நோயாளிகளை வாள்களோடு வந்தவர்கள் வெட்டிவிட்டு ஓடுவதும், நோயாளிகளைப் பார்வையிட வருவோரும் பாதுகாப்புக் கடமையில் இருப்போரும் மாறிமாறி தாக்குதல்களை நடத்துவதும் என்றவாறாக வடக்கில் இப்போது வன்முறைகளை அரங்கேற்றும் களமாக மருத்துவமனைகள் மாறத் தொடங்கிவிட்டன. மருத்துவமனைகளின் மாண்பினை சரிவரப் புரிந்து கொள்ளாதவர்களே, இப்படி மருத்துவமனைகளை வன்முறைக்களமாக மாற்றுகின்றனர். எல்லோருக்குமே மருத்துவமனைகளின் பெறுமதியைப் பற்றிய புரிதலும், மதிப்பும் இருக்குமென்ற தற்றுணிவில் அங்கு ஆயுதம் ஏந்தியவர்கள் பாதுகாப்புப்பணியில் ஈடுபடுத்தப்படுவதில்லை. இதுதான் வன்முறையாளர்களுக்கு வசதியாகப் போய்விட்டது. ஆயுதமற்ற பாதுகாப்புக் கடமையாளர்களால் தங்களை எதுவும் செய்யமுடியாது என்ற நினைப்பில் தான், இவ்வளவு துணிச்சலாகவந்து தாக்கிவிட்டுச் செல்கின்றனர்.

இவற்றை எல்லாம் தாங்கிக்கொண்டு, எப்போது வன்முறையாளர்கள் வருவார்களோ என்ற அச்சத்தோடு மருத்துவம் செய்யமுடியாதே. அதனால்தான் பொலிஸாரின் பாதுகாப்பை சில மருத்துவமனைகள் கோரியுள்ளன. நாடு இப்போதிருக்கும் சூழலில் இவ்வாறு மருத்துவமனைகளைப் பொலிஸ் பாதுகாப்பின்கீழ் கொண்டு வருவதென்பது அதிகளவான ஆளணியையும், பெரும் செலவினத்தையும் கோரிநிற்கும் விடயமாகும். ஆனால், அவ்வாறு செலவினத்தைப் பார்த்து பொலிஸ் பாதுகாப்பு அளிக்காவிட்டால், மருத்துவமனைகளில் பணிபுரிவோரினதும், நோயாளிகளினதும் வாழ்வுபற்றிய அச்சம் விஸ்வரூபமெடுக்கக்கூடும். சேலையும் கிழியாமல், முள்ளும் குத்தாமல் கையாள வேண்டிய இக்கட்டான நிலைமை. இந்த நிலையை ஏற்படுத்தியது வேற்றுநாட்டவர்களோ அல்லது நம் எதிரிகளோ அல்லர். நமது உயிர்களைக் காக்கும் உன்னத இடத்தை நாமேதான்; அதன் புனிதத்தை அறியாமல், புண்படுத்தும் வேலையைச் செய்து கொண்டிருக்கிறோம். எல்லைமீறிய வன்முறைகள் மருத்துவமனைக்குள்ளும் புகுவதென்பது ஒருசமூகத்தின் அழிவுக்கான சுட்டியே. இதிலிருந்து மருத்துவமனைகளை மட்டுமல்ல நம் சமூகத்தையும் காப்பாற்றவேண்டிய பொறுப்புநம் அனைவருக்கும் உரித்தானதே...!




# மாணவர் கல்வியில் விளையாடாதீர்கள்!



## சமன் ரத்னப்பிரிய தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 29

**அரசாங்கத்தை நெருக்கடிக்குள்ளாக்கும் நோக்கில் மாணவர்களின் எதிர்கால வாழ்க்கையுடன் விளையாடவேண்டாம் என ஆசிரியர்களிடம் கேட்டுக்கொள்கிறோம்.**

பரீட்சைப் பெறுபேறுகள் தாமதமாவதன் மூலம் அனைத்துப் பரீட்சைகளும் பின்தள்ளப்படும். இதனால் மாணவர்களே பாதிக்கப்படப்போகிறார்கள் - இவ்வாறு ஜனாதிபதியின் தொழில் உறவுகள் ஆணையாளர் நாயகம் சமன் ரத்னப்பிரிய தெரிவித்துள்ளார். ஆசிரியர்களின் பிரச்சினை தீர்க்கப்படவேண்டும். அவர்களின் கோரிக்கைகளுக்குத் தீர்வு காண்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துவருகிறது. பொருளாதாரரீதியில் நாடு நெருக்கடியை எதிர்கொண்டுள்ள நிலையில் அவர்களின் கோரிக்கைகளை உடனடியாகத் தீர்க்க முடியாத நிலை காணப்படுகிறது. அரசாங்கத்தைத் தொடர்ந்து நெருக்கடிக்கு ஆளாக்கும் நோக்கில், பொலிஸாரின் நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில், கல்வி பொதுத் தராதர சாதாரணப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டு நடவடிக்கைகளில் இருந்து ஒதுங்கிக்கொள்ளப்போவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இது மாணவர்களின் கழுத்தை நெரிக்கும் செயல்- என்றார். (ச-இ)

# கெஹலியவின் மனு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 29

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தாக்கல் செய்த ரிட் மனு மேல் முறையீட்டு நீதிமன்றத்தால் மீண்டும் ஜூலை மாதம் முதலாம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது. மாளிகாகந்த நீதிவான் நீதிமன்றத்தால் தன்னை வழக்கு விசாரணை முடியும்வரை விளக்கமறியலில் வைக்குமாறு பிறப்பிக்கப்பட்ட உத்தரவை இரத்துச் செய்து ஆணை பிறப்பிக்குமாறு கோரி கெஹலிய ரம்புக்வெல ரிட் மனு தாக்கல் செய்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-இ)

# பாடசாலைச் சிற்றுண்டி தரம் திடீர்ச் சோதனை

கொழும்பு, ஜூன் 29

பாடசாலைகளில் காணப்படும் சிற்றுண்டிச்சாலைகளில் வழங்கப்படும் உணவுப்பொருள்களின் தரம் தொடர்பில் ஆராயப்படவுள்ளது என்று கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாசலம் அரவிந்தகுமார் தெரிவித்துள்ளார்.

பாடசாலை சிற்றுண்டிச்சாலைகளில் வழங்கப்படும் உணவுப் பொருள்களின் தரம் தொடர்பில் பல்வேறு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. இந்த விடயம் தொடர்பில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் எதிர்வரும் நாள்களில் திடீர்ச் சோதனைகளை முன்னெடுக்கவுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

# முட்டை உற்பத்திக்கு புதிய சட்டம்

முட்டை உற்பத்தியை அதிகரிக்கப் புதிய திட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

முட்டை மற்றும் பால் உற்பத்தியில் இன்னும் எம்மால் தன்னிறைவு அடைய முடியவில்லை.

அதற்கமைய தொழில்முனைவோருக்கு ஒரு இலட்சத்து 60,000 கோழிக் குஞ்சுகள் வழங்கப்படவுள்ளன. முட்டை உற்பத்தியை அதிகரிப்பதற்காகப் புதியதிட்டம் வகுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

# சீனாவுக்கு மஹிந்த

கொழும்பு, ஜூன் 29

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச சீனாவுக்கு நான்குநாள் உத்தியோகபூர்வ பயணமொன்றை மேற்கொண்டுள்ளார். பீஜிங்கில் அமைதியான சகவாழ்வுக்கான ஐந்து கோட்பாடுகளின் 70ஆவது ஆண்டு விழாவில் கலந்துகொள்வதற்காக சீன வெளியுறவு அமைச்சரின் அழைப்பின் பேரிலேயே மஹிந்த இந்தப் பயணத்தை மேற்கொண்டுள்ளார். (ச-இ)

**நாளை**

30.06.2024

ஞாயிற்றுக்கிழமை

ஆனி - 16

சுபநேரம் : 08.56 - 10.26

ராகுகாலம் : 04.26 - 05.56

**நாளொரு நல்வார்த்தை**

**அரைகுறையாக எதையும் செய்யாதீர். நல்லவை என்றால் துணிந்து நிறைவேற்றுங்கள். கெட்டது என்றால் அதைச் செய்யாமல் அறவே தவிர்த்துவிடுங்கள்.**

**-கில்ப்பின்-**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆண்டு விழா

யாழ்ப்பாணம், ஜுன் 29

சக்திகலாசார மேம்பாட்டு மன்றத்தின் 22 ஆவது ஆண்டு நிறைவு விழா திருமதி அருண்ராஜன் சனுஜா தலைமையில் யாழ்.நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாலயத்தில் இன்று சனிக்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளது. நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அபிவிருத்தி கலாசார உத்தியோகத்தர் இ.கிஸ்ணகுமார், கௌரவ விருந்தினராக யாழ். மாவட்ட செயலக புள்ளிவிவரக்கிளை உதவிப்பணிப்பாளர் ம.வித்தியானந்தநேசன், சிறப்பு விருந்தினராக தென்மராட்சி பிரதேச கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி மதன் கவிதா மற்றும் நாவற்குழி முன்பள்ளி ஆசிரியர் ஏ.உதரி நிசன்சலா, எல்.எம்.டி.எம்.யூ நிறுவனத்தின் பணியாளர் திருமதி நந்தகுமார் பவளமலர், ஓய்வு நிலை ஆசிரியர் திருமதி பஞ்சலிங்கம் கமலாதேவி, சுடர் நிலா புத்தக சாலை உரிமையாளர் த.தனசீலன், ஒப்பந்தகாரர் கு.உதயசீலன், ஓய்வுநிலை சி.டி.பீ சமூகசிற்பிகள் க.சின்னராசா ஆகியோர் கலந்துகொள்ள வுள்ளனர். (ம-25)



## உடைமையில் வாள்கள் மூவர் நேற்றுக் கைது!

யாழ்ப்பாணம் - கோண்டாவில் பகுதியில், கைக்கோடரிகள் மற்றும் வாள்களை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் மூவர் நேற்று கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் 23 மற்றும் 24 வயதுடையவர்கள் என்றும், அவர்கள் பருத்தித்துறையைச் சேர்ந்தவர்கள் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். கைது செய்யப்பட்டவர்களிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (ம-26)



## வாகை சூடியது மேல்மாகாண அணி

இலங்கை விளையாட்டுத்துறை அமைச்சால் நடத்தப்பட்ட, 48 ஆவது தேசிய விளையாட்டுப் போட்டியில் பெண்களுக்கான கூடைப்பந்தாட்டத்தில் மேல்மாகாண அணி வெற்றி பெற்றுள்ளது.

போட்டியின் ஆரம்பம் முதல் மேல்மாகாண மற்றும் வடமாகாண அணி வீரர்கள் தமது அணிக்கான புள்ளிகளைப் பெற்றுக் கொடுப்பதில் ஆர்வம் காட்டினர். இதனால் போட்டி, இறுதிக் கட்டம் வரை விறுவிறுப்பாகச் சென்றது.

கடுமையான போட்டியின் பின்னர் 56 க்கு 56 என்று, போட்டி சமநிலையில் வர மேலதிக நேரமாக 5 நிமிடம் வழங்கப்பட்டது. இந்நிலையில் 66 க்கு 63 என்ற அடிப்படையில் 3 புள்ளிகளை அதிகம் பெற்று, வடமாகாண அணியை வீழ்த்தி மேல்மாகாண அணி வெற்றியைத் தன்வசமாக்கியது. (ப-125,20)

## ஜனாதிபதி சுற்றுச்சூழல் விருது கிளி. விவேகானந்த வித்திக்கு

கொழும்பு, ஜுன் 29

2024 ஆம் ஆண்டுக்கான ஜனாதிபதி சுற்றுச்சூழல் விருதுக்கு ஒரேயொரு தமிழ்ப் பாடசாலையாக விவேகானந்த வித்தியாலயம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மண்டபத்தில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற நிகழ்வில் இந்த விருது வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

நாடளாவிய ரீதியில் பாடசாலைகள், நிறுவனங்கள், அமைப்புகள் என 902 பேர் இந்த விருதுக்கு விண்ணப்பித்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-214)



உ

# ஈழத்து பழனிமலை

# அகில இலங்கை யாழ்ப்பாணம் அருள்மிகு சுன்னாகம் மயிலணி கந்தசுவாமி தேவஸ்தானம்



முருகப்பெருமான் அடியார்களே!

நிகழும் மங்களகரமான குரோதி வருஷம் ஆனி மாதம் 17 ஆம் நாள் (01.07.2024) திங்கட்கிழமை அன்று ஆலய வருடாந்த மஹோற்சவ பெருவிழா கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 12 தினங்கள் உற்சவம் நடைபெற திருவருள் பாலித்துள்ளது. அடியார்கள் ஆசார சீலர்களாக வருகை தந்து முருகப்பெருமானின் அருளை பெற்றுய்யும் வண்ணம் வேண்டிக்கொள்கின்றோம்.

## விசேட உற்சவங்கள்

| | | | |
|---|---|---|---|
| ◆ 30.06.2024 | ஞாயிற்றுக்கிழமை | மாலை | பூர்வாங்கக் கிரியைகள் |
| ◆ 01.07.2024 | திங்கட்கிழமை | காலை | 10.00 மணிக்கு கொடியேற்றம் |
| ◆ 02.07.2024 | செவ்வாய்க்கிழமை | மாலை | 6.00 மணிக்கு மாம்பழத்திருவிழா |
| ◆ 05.07.2024 | வெள்ளிக்கிழமை | மாலை | 6.00 மணிக்கு ஆறுமுகசாமி நடனம் |
| ◆ 07.07.2024 | ஞாயிற்றுக்கிழமை | மாலை | 6.00 மணிக்கு கைலாயவாகனத் திருவிழா |
| 10.07.2024 | புதன்கிழமை | பகல் | வேட்டைத்திருவிழா |
| | | மாலை | திருக்கல்யாணம், சப்பறத்திருவிழா |
| ◆ 11.07.2024 | வியாழக்கிழமை | காலை | 10.30 மணிக்கு தேர்த்திருவிழா |
| ◆ 12.07.2024 | வெள்ளிக்கிழமை | காலை | 9.00 மணிக்கு தீர்த்தத் திருவிழா |
| | | மாலை | 5.00 மணிக்கு திருவூஞ்சல், கொடியிறக்கம், சண்டேஸ்வரர் உற்சவம், ஆசாரியார் உற்சவம் |
| ◆ 13.07.2024 | சனிக்கிழமை | காலை | 7.30 மணிக்கு பிராயச்சித்த சகஸ்ர சங்காபிஷேகம் (1008) |
| | | மாலை | 6.00 மணிக்கு பூங்காவன உற்சவம் |
| ◆ 19.07.2024 | வெள்ளிக்கிழமை | மாலை | 5.00 மணிமுதல் வைரவர் சாந்தி உற்சவம் |

தினமும் காலை 7.30 மணிக்கு அபிஷேகம் ஆரம்பம் , மாலை 5.30 மணிக்கு சாயரட்சை பூஜை ஆரம்பம்

**குறிப்பு: 13.07.2024 சனிக்கிழமை மாலை விசேட நிகழ்வாக வல்வை மைந்தர் வழங்கும் கரகாட்டம் பொம்மலாட்டம், தீப்பந்தாட்டம் ஆகியன சிறப்பு நிகழ்வாக நடைபெறும்.**

- தேவஸ்தான மங்களவாத்தியம் - நம்பிராசா பிரதீபன் குழுவினர் - சுன்னாகம் கிழக்கு,
- ஒலி ஒளி அமைப்பு - வரியப்புலம் மகாமாரி

தொண்டர்சபை உறுப்பினர்
பரணிதரன்

சுன்னாகம் ஜெட்மோட்டஸ் M.M. திருமண மண்டபம் முன்னால், மயிலணி பாடசாலை வீதி, சுன்னாகம்.

(cs 55519)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரூ.1700 வேதன உயர்வு வழக்கு நவம்பருக்கு

தோட்டத்தொழிலாளர்களுக்கு 1,700 ரூபா நாள் சம்பளம் வழங்கப்படவேண்டுமென வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலை இரத்துச் செய்யக்கோரி பெருந்தோட்டக்கம்பனிகள் தாக்கல் செய்த வழக்கின் விசாரணை நவம்பர்மாதம் 8 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

தோட்டத்தொழிலாளர்களுக்கு 1,700 ரூபா நாள் சம்பளம் வழங்கப்படவேண்டுமென ஜனாதிபதியின் கோரிக்கைக்கமைய வர்த்தமானியில் வெளியிடப்பட்டது. இந்த வர்த்தமானி அறிவித்தலை இரத்துச் செய்யக்கோரி, 21 பெருந்தோட்டக்கம்பனிகள் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனுவொன்றைத் தாக்கல் செய்துள்ளன. இந்த மனுவில் தொழிலமைச்சர் மனுஷ நாணயக்கார மற்றும் தொழில் ஆணையாளர் ஆகியோர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டனர். தங்களுடன் கலந்தாலோசிக்காமல் அரசாங்கம் எடுத்த தீர்மானம் நீதியற்றது என பெருந்தோட்டக் கம்பனிகள் மனுவில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-25-6)

## கணக்கு உதவியாளர் தேவை

**ASR Valuation and Real Estate Consultancy (Pvt) Ltd**

எனும் நிறுவனத்திற்கு கணக்கு உதவியாளர் தேவை.
22 - 30 வயதிற்குட்பட்டவர்கள்.
ஆர்வமுள்ளவர்கள் சுயவிபரக் கோவையை கீழ்வரும் தொலைபேசி இலக்கத்திற்கு அல்லது மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**075 316 1419**
asrnorthern25@gmail.com

அரசடி வீதி, யாழ்ப்பாணம்.
(தட்டாதெரு சந்திக்கு அருகாமையில்) 021 222 5277, 076 772 5781
(CS/55513) J-1

## 20ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 18 . 01 . 1933
மறைவு 09 . 07 . 2004



அமரர்
**சிவஞானபிள்ளை நடேசபிள்ளை (கடை அப்பு)**
(சரவணை மேற்கு, புங்குடுதீவு - 3, யாழ் நாவலர் வீதி, வவுனியா பண்டாரிக்குளம்)
திதி: 29.06.2024

ஆண்டுகள் இருபது ஆனபோதும் ஆறவில்லை எம் துயரம்
நீண்டு நெடுவாழ்வு நாம் வாழ வகுத்த தெய்வமே
தீண்டும் உங்கள் நினைவுகளால் எமதுள்ளங்கள் நிறைகின்றன
ஆண்டவனை ஆராதிக்கின்றோம் தங்கள் ஆத்மா சாந்தியடைய

2C வியாசர் வீதி,
பண்டாரிக்குளம், வவுனியா.
குடும்பத்தினர்
(CS/835) J-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 07 . 10 . 1959
மறைவு 25 . 06 . 2024



### சுந்தரராசன் திருமணி

சுன்னாகம் தெற்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுந்தரராசன் திருமணி கடந்த (25.06.2024) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - நல்லபிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற இராசா - மற்றும் சுந்தரம் (லண்டன்) தம்பதியரின் அன்பு மருமகளும், சுந்தரராசன் அவர்களின் அன்பு மனைவியும், ஜேஸ்ராஜன் (கனடா) அவர்களின் அன்புத் தாயாரும், நிகாயினி (கனடா) அவர்களின் அன்பு மாமியாரும், அருவி, விசாகன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், சிவனேஸ்வரி, யோகேஸ்வரி, சிவப்பிரகாசம் (கனடா), தியாகலிங்கம், மகேந்திரலிங்கம் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், இராஜேஸ்வரி (கனடா), ரவீந்திரராசா (இந்தியா), இராஜலக்ஷ்மி (லண்டன்), சௌந்தரராஜா (லண்டன்), ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.06.2024) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்
சுந்தரராசன் (கணவர்) - 077 331 8350
ஜேஸ்ராஜன் (மகன்) - 077 547 1513

கதிரமலை வீதி,
சுன்னாகம் தெற்கு,
சுன்னாகம்.
(CS/55510) J-1

## மரண அறிவித்தல்



### செல்லையா ஸ்ரீதரன்

சாவகச்சேரி, சங்கத்தானை, பெரிய அரசடியைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸை (France) வதிவிடமாகவும் கொண்ட செல்லையா ஸ்ரீதரன் கடந்த (24.06.2024) திங்கட்கிழமை காலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சிவசுப்பிரமணியம் - கண்மணி தம்பதியரின் அன்பு மருமகனும், ஸ்ரீவதனியின் அன்புக் கணவரும், சில்வன், ஷங்கா, ஷரிகா ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற சிவபாலன் மற்றும் புவனேஸ்வரி, ஈஸ்வரதாஸ், லோகேஸ்வரி, கமலேஸ்வரி, மனோகரன், இரஞ்சிதன், பாஸ்கரன், ஸ்ரீகாந்தன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான மயிலுப்பிள்ளை, யோகநாதன் மற்றும் தவமணி, குமாரசுவாமி, தேவகி, வத்சலா, ஆனந்தராணி, பாலநந்தினி ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஸ்ரீதரன், ஸ்ரீரங்கன், ஸ்ரீஸ்கந்தன், ஸ்ரீபிரகாஸ், ஸ்ரீபத்மினி, ஸ்ரீகலா, ஸ்ரீதரி, ஸ்ரீலதா ஆகியோரது அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது பிறப்பிடமாகிய தாய் மனையில் நாளை (30.06.2024) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் முற்பகல் 11.00 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மண்ணுலகம் 21.02.1953
விண்ணுலகம் 24.06.2024

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
சகோதர சகோதரிகள்.
(செல்லையா குடும்பத்தினர்)

"ஸ்ரீபதி"
[illegible] வீதி, பெரிய அரசடி,
சங்கத்தானை, சாவகச்சேரி.
(CR/42720) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம்
04
.
02
.
1938



மறைவு
28
.
06
.
2024

## இம்மானுவல் இம்மாகுலேற்

யாழ்ப்பாணம் 21/1 சின்னக்கடை வீதியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இம்மானுவல் இமாக்குலேற் நேற்று (28.06.2024) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஜோசப் இராயறட்ணம் - சூசன் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான இம்மானுவல் - மற்றில்டா (லில்லி) தம்பதியரின் அன்பு மருமகளும், அல்பிரட் ஜோசப் இம்மானுவல் (பெனிற்றோ) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான ரவிந்திரகுமார், ரஞ்சித்குமார், கீதாந்தினி மற்றும் ராஜ்குமார், சுஜாந்தி ஆகியோரின் பாசமிகு தாயாரும், புஸ்பா, பிறின்சி, விஜிதா, சமிந்தன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், காலஞ்சென்றவர்களான பிறிச்சேட், செபஸ்ரியன், கில்டா, பியாற்றிஸ், எஸ்ரம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்றவர்களான பவா, சோதி, அன்ரன், ராஜன், ஜோச், ஜீவம், கமினி, ரஜனி ஆகியோரின் மைத்துனியும், றெக்னோ, கீதாந்தினி, மகிழன், கரிஸ்ராஜ், யாழ்நிலா, ஓவியா, அம்மு, இளங்கதிர், ஆதித்தன், பிறேமிக்கா, யதுர்சான், டிலுக்சான் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், எட்றிக்கின் பூட்டியுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (29.06.2024) சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் அவரது இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு புனித யாகப்பர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**077 2767 919**

**21/1, சின்னக்கடை வீதி,**
**குருநகர், யாழ்ப்பாணம்.**

(CS/55527) J-1

# மரண அறிவித்தல்

பிறப்பு
.
24
.
01
.
1953



இறப்பு
.
26
.
06
.
2024

## இந்திராணி சிவதாஸ்

(ஓய்வுபெற்ற அதிபர் - யா/ வேலணை சரஸ்வதி வித்தியாலயம்)

வேலணை வடக்கைப் பிறப்பிடமாகவும், ஆத்திசூடி வீதி, கந்தர் மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட இந்திராணி சிவதாஸ் கடந்த (26.06.2024) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவனேசப்பிள்ளை - இராசம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான இரட்ணசபாபதி - நாகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகளும், சிவதாஸ் அவர்களின் அன்பு மனைவியும், சஞ்சயன் (லண்டன்), ஜனார்த்தனி (அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரதேச செயலகம் - வேலணை), சாம்பவி (ஜேர்மனி), பிரணவி (இலங்கை மத்திய வங்கி - கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தாயாரும், கஜிதா (லண்டன்), கஜீரன் (இலங்கை வங்கி), புவிகரன் (ஜேர்மனி), யதுகுலன் (SGS Lanka (Pvt) Ltd) ஆகியோரின் அன்பு மாமியாரும், தர்மராணி, செல்வராணி, விஜயலக்ஷ்மி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற வதனி மற்றும் மகேந்திரன், இராசேந்திரம், கர்ணன், இரட்ணேஸ்வரி, இரட்ணராஜா, ஞானேஸ்வரி, பரராஜசிங்கம், மகேஸ்வரி, விமலேஸ்வரி, சடாட்சரம், ரஜனிதேவி, கேதீஸ்வரன் ஆகியோரின் அன்பு மைத்துனியும், ரிஷிகேஷன், ஹாசினி, மாதினி, அக்ஷனா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.06.2024) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**கணவர் சிவதாஸ்**
**077 725 0986**

**42/4, ஆத்திசூடி வீதி,**
**கந்தர் மடம்,**
**யாழ்ப்பாணம்.**

(CS/55519) N-1

# குப்பிழான் முழுவதும் இன்று மின்தடை!

யாழ்., ஜூன் 29

யாழ்ப்பாணம் குப்பிழான் முழுவதும் இன்று சனிக்கிழமை காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை மின்சாரம் தடைப்பட்டிருக்குமென இலங்கை மின்சாரசபை அறிவித்துள்ளது.

குப்பிழானில் பொருத்தப்பட்டுள்ள மின்மாற்றியின் திருத்தப் பணிகள் காரணமாகவே மின்சாரம் தடைப்பட்டிருக்குமெனவும் தெரிவித்தார். (ம-66)

## பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம்

பரமேஸ்வராக் கல்லூரி பழைய மாணவர் சங்க யாழ்ப்பாணக் கிளையின் பொதுக்கூட்டம் 30.06.2024 நாளை காலை 9.30 மணியளவில் திருநெல்வேலி இந்து வாலிபர் சங்க மண்டபத்தில் **(Y.M.H.A)** ஆரம்பமாகி நடைபெறும். அன்று புதிய ஆண்டுக்கான 2024/2025 நிர்வாக உத்தியோகத்தர்கள் தெரிவு நடைபெறும். அங்கு படித்தவர்கள் சங்கத்தில் சேராதிருந்தால் அன்று வந்து சேர்ந்து பதியலாம். மதியச் சாப்பாட்டுடன் கூட்டம் நிறைவுபெறும்.

**சட்டத்தரணி கனக நமநாதன்**
**தற்காலிக தலைவர்**

(CS/55523) J-1

## சங்கானை அம்மாச்சி பாரம்பரிய உணவகத்திற்கு பெண் உணவு தயாரிப்பாளர்கள் தேவை.

வலிகாமம் மேற்கு பிரதேச சபையினால் சங்கானை பஸ்தரிப்பு நிலைய சதுக்கத்தில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள அம்மாச்சி பாரம்பரிய உணவகத்தில் சுய தொழில் அடிப்படையில் மரக்கறி உணவு, சூப் வகைகள் மற்றும் பழரசங்கள் தயாரித்து விற்பனை செய்து வருமானம் உழைப்பதற்கு ஆர்வமுள்ள பெண் தலைமைத்துவக் குடும்பத்தைச் சார்ந்த பெண்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. வலிகாமம் மேற்கு பிரதேச எல்லைக்குட்பட்டவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**விண்ணப்ப இறுதித் திகதி :- 05.07.2024**

**செயலாளர்,**
**வலிகாமம் மேற்கு பிரதேச சபை,**
**சுழிபுரம்.**
**021 2250144**

(CR/42723) J-1

# ஆதனப் பெயர்மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் 18, கொழும்புத்துறை வீதி, 581/20 என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் சொந்தக்காரர் என ஆதனவரிப் பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனத்தை இல-02, கோயில் வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த யுவக்கீம்பிள்ளை டொமினிக் என்ற யுவக்கீம்பிள்ளை அருள்நாயகம் டொமினிக் அவர்கள் 19.03.1979ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு அ.மரியாம்பிள்ளை முகதாவில் 412ம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட அறுதி உறுதி மூலம், இல-24/4, மத்திய கிழக்கு வீதி, குருநகர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சவிரிமுத்து கிறிஸ் தோபரும் பெண் ஹெலனுக்கும் வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனம் இல-25/2, மத்திய கிழக்கு வீதி, குருநகர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திருமதி, றிச்சேட் கான்ஸ்போவர் எலிசபேத் குயின் அவர்கள் 15.01.2004ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு A. இராஜரட்ணம் முகதாவில் 2015ம் இலக்க வெளிப்படுத்தல் உறுதி மூலம், தனது பெற்றோரான சவிரிமுத்து கிறிஸ்தோபரும் பெண் ஹெலனும் மரணிக்க ஏகவாரிசான தனக்குரித்தானதும், தனதாட்சியுமானதென வெளிப்படுத்தியுள்ளார்.

குறித்த ஆதனத்தை இல-25/2, மத்திய கிழக்கு வீதி, குருநகர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த (தற்காலம் பிரான்ஸ்) றிச்சேட் கான்ஸ்போவர் தனது அற்றோணி திருமதி, எலிசபேத் குயின் றிச்சேட் கான்ஸ்போவர் மூலமும், திருமதி றிச்சேட்கான்ஸ்போவர் எலிசபேத் குயினும் 27.10.2014ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு திருமதி.ஜெயசித்ரா சிறிதரன் முகதாவில் 2213ம் இலக்க நன்கொடை உறுதி மூலம் தமது பெறாமகளான இல-18/8, மத்திய கிழக்கு வீதி, குருநகரைச் சேர்ந்த சாந்தகுமார் நிறோசன் பெண் விதுஸ்ரா றெனுசியாவுக்கு வழங்கியுள்ளனர்.

குறித்த ஆதனத்தை யாழ்ப்பாணம், குருநகர், புதியகடற்கரை வீதி, இல-93 ஐச் சேர்ந்த சாந்தகுமார் நிறோசனும் பெண் விதுஸ்ரா றெனுசியாவும் 15.09.2015ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு தேவராசா சுபாஜினி முகதாவில் 187ம் இலக்க அறுதி உறுதி மூலம் குருநகர், மத்திய கிழக்கு வீதி, இல-10/1 ஐச் சேர்ந்த கபிரியேல்பிள்ளை கிறிஸ்தோப்பர் மற்றும் கிறிஸ்தோப்பர் பெண் றெஜினா ஆகியோருக்கு வழங்கியுள்ளனர்.

குறித்த ஆதனத்தை குருநகர், மத்திய கிழக்கு வீதி, இல-10/1 ஐச் சேர்ந்த கபிரியேல்பிள்ளை கிறிஸ்தோப்பரும், கிறிஸ்தோப்பர் பெண் றெஜினாவும் 20.05.2022ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு சி. இளங்கீரன் முகதாவில் 14618ம் இலக்க அறுதி உறுதி மூலம் அதே முகவரி இல-12 ஐச் சேர்ந்த செல்வி. யூலி பிரகாசராசாவுக்கு வழங்கியுள்ளனர்.

**ஆதன அட்டவணை**

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், சுண்டிக்குளி கோவிற்பற்று, யாழ்ப்பாணம் மாநகர சபை, யாழ்ப்பாணம் பிதேச செயலகம், கிராம அலுவலர் பிரிவு-J/61, கொழும்புத்துறை இறை "அமரக்கோன் முதலியார் காட்டுத்தலைமடையும் மறுபிரிவுகளும்"என்று வழங்கும் "கொழும்புத்துறை தெருத் தோட்டம்" விஸ்தீரணம் நிலப்பரப்பு 6. இதனை உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் K.கனகசபை அவர்கள் 14.06.2020ம் திகதியில் 1-6 துண்டுகளாக பிரிவிட்டுத் தயாரித்த 6088A-91/14ம் இலக்க நிலஅளவைப் படத்தின்படியும் விஸ்தீரணம் நிலப்பரப்பு 6. இதில் குறித்த 6088A-91/14ம் இலக்க நில அளவைப்படத்தில் துண்டு-01 எனச்சுட்டப்பட்ட பாகம் விஸ்தீரணம் நிலப்பரப்பு (1) ஒன்றும், வான்பயிர் செய்பயிர்களும் மற்றுமதற்குச் சேர்ந்தவைகளும். இதற்கு எல்லைகள்:-

கிழக்கு :- குறித்த 6088A-91/14ம் இலக்க நிலஅளவைப்படத்தில் துண்டு-02 எனச்சுட்டப்பட்ட பாகம்.
வடக்கு :- ஆறு மீற்றர் அகலமான பாதை
மேற்கு :- ஆறு மீற்றர் அகலமான பாதை
தெற்கு :- குறித்த அளவையாளரின் 6088/A/14ம் இலக்க நிலஅளவைப்படத்தில் துண்டு 92 என சுட்டப்பட்ட பாகம். இதடங்களும்.

இன்னும், வடக்கே உள்ள ஆறு மீற்றர் அகலமான பாதையால் பிரதான வீதிக்கு போக்குவரத்து செய்வதற்கான பாதை பாவிப்புரித்தும்.

தற்போது செல்வி. யூலி பிரகாசராசா இவ்வாதனத்தைத் தனது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு உரிமைகோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒருமாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும், உரிமைகோராவிடத்து குறித்த ஆதனமானது செல்வி. யூலி பிரகாசராசா என்னும் பெயரிற்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாண மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் அறியத்தருகின்றேன்.

**ஆணையாளர்,**
**யாழ் மாநகர சபை.**

(CR/42741) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*'Education யாழ்ப்பாணம்'*

# நிகழ்ச்சித்திட்ட அமர்வு வடக்கில் இருநாள்கள்

கொழும்பு, ஜூன் 29
சர்வதேச வெளிநாட்டு கற்கைமையம் ஏற்பாடு செய்துள்ள 'Education யாழ்ப்பாணம்' மூன்றாவது அமர்வு இன்று சனிக்கிழமை, வவுனியா பொது நூலகத்திலும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் பொது நூலகக் கேட்போர் கூடத்திலும் முற்பகல் 10 மணி முதல் மாலை 5 மணி வரை இடம் பெறவுள்ளது.

இந்த அமர்வு வடக்கு மாகாணத்திலுள்ள விண்ணப்பதாரர்களுக்கு அவுஸ்திரேலியா, நியூஸிலாந்து, இங்கிலாந்து, கனடா, ஜேர்மனி மற்றும் மால்டா ஆகிய நாடுகளிலுள்ள கல்வி தொடர்பான தெரிவுகளையும், விருப்பங்களையும் ஆராய்வதற்கான வாய்ப்புகளை வழங்கும்.

"Education யாழ்ப்பாணம்" நிகழ்ச்சித்திட்டம் முதன்மைப்படுத்தப்படுகின்ற கற்கைகளுக்காக நாடுகள் பணச் செலவுகளை ஏற்படுத்தாத வகையிலும், நிதிப்பங்களிப்புகள் சலுகை அடிப்படையிலும் வசதிகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

குறிப்பாக மாணவர்களுக்கு வழங்கப்படும் புலமைப் பரிசில்கள், விண்ணப்பதாரர்களின் வசதியைக் கருத்திற்கொள்வதுடன் இது வடக்கில் உள்ள தகுதியான மாணவர்களுக்கு ஒரு விலைமதிப்பற்ற வாய்ப்பாக அமையும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-25)

## வேலை ஆட்கள் தேவை

திருக்கோவில் நிகழ்வுகளை வீடியோ பிடித்திட வேலை ஆட்கள் தேவை. அனுபவம் உள்ளவர்கள் , பழக விரும்புபவர்கள் தொடர்பு கொள்ளவும்.
077 930 7412
(CS/55515) J-1

## சாரதி தேவை

யாழ்ப்பாணம் தாவடியில் இயங்கிவரும் அரிசியாலை ஒன்றிற்கு கனரக வாகன சாரதி தேவை.
076 096 9728 / 076 096 9734
(cs 839)(N.1)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 01 . 08 . 2004
மறைவு 29 . 06 . 2022

கடந்த 29.06.2022 அன்று சரவணை
கதிர்வேலாயுதசுவாமி தீர்த்தக்கேணியில் அகாலமரணமடைந்த
அமரர்
**சதானந்தன் விதுஷன்**

ஆண்டுகள் இரண்டு கடந்து சென்றாலும்
ஆறவில்லை எங்கள் மனம் குடும்பம் என்ற கோயிலில்
குலவிளக்காக திகழ்ந்த எங்கள் தெய்வமே!
மாண்டாலும், மறையாது
உங்கள் நினைவு என்றென்றும்.
ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்

சரவணை மேற்கு,
வேலணை, 3ம் வட்டாரம்
(CS/55517) J-1
குடும்பத்தினர்
076 915 1026

## மரண அறிவித்தல்



தோற்றம் 03 . 11 . 1948
மறைவு 26 . 06 . 2024

### செல்லத்துரை சந்திரானந்ததேவி

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை சந்திரானந்ததேவி கடந்த (26.06.2024) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆழ்வார் வல்லிபுரம் (சண்முகம்) - முத்தம்மா தம்பதியரின் அருமைப் புதல்வியும், காலஞ்சென்றவர்களான பூதப்பிள்ளை - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற பூதப்பிள்ளை செல்லத்துரை (ஆசிரியர் யாழ். மத்திய கல்லூரி) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற செல்வன் செல்லத்துரை மோகன பிரதீபன், மற்றும் செல்லத்துரை கார்த்தீபன் (யாழ். மத்திய கல்லூரி பழைய மாணவன் கிரிக்கட் அணி தலைவன் - இங்கிலாந்து) ஆகியோரின் பாசமிகு தாயாரும், கார்த்தீபன், நிரோஜா (சட்டத்தரணி இங்கிலாந்து) அவர்களின் பாசமிகு மாமியாரும், காலஞ்சென்ற விவேகானந்தன் (அமெரிக்கா), விபுலானந்த அடிகளார் (கனடா) ஆகியோரின் அருமைச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான ஆழ்வார் செல்லையா, ஆழ்வார் மாணிக்கம், கிட்ணபிள்ளை பொன்னம்மா, தம்பையா இலட்சுமிப்பிள்ளை ஆகியோரின் பெறாமகளும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை, அன்னம்மா ஆகியோரின் பாசமிகு மருமகளும், பூதப்பிள்ளை தேவராஜா (பிரான்ஸ்), பூதப்பிள்ளை விஜயன் (ஜேர்மனி), பூதப்பிள்ளை மன்மதன் (பிரான்ஸ்), பாஸ்கரன் ஜெயதேவி (அமெரிக்கா) ஆகியோரின் அன்பு மைத்துனியும், வல்லிபுரம் விஜயசிங்கம், வல்லிபுரம் விமலகுலசிங்கம் (ஜேர்மன்), வல்லிபுரம் விஞ்ஞானகுலசிங்கம், ஸ்ரனிஸ்லஸ் கமலா (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், வத்சலா விவேகானந்தன் (அமெரிக்கா), மஞ்சுளா விபுலானந்தன் (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.06.2024) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் சைவ மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றர், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

12, பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.
தகவல்:
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்



தோற்றம் 30 . 09 . 1949
மறைவு 25 . 06 . 2024

### கணபதிப்பிள்ளை பரமநாதன்

**(ஓய்வு பெற்ற ஆசிரியர் யா/ முத்துத்தம்பி மகா வித்தியாலயம்)**

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும், கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை பரமநாதன் கடந்த (25.06.2024) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - மீனாட்சிப்பிள்ளை தம்பதியரின் அருமை மகனும், காலஞ்சென்றவர்களான துரைசிங்கம் - இரத்தினம் தம்பதியரின் பாசமிகு மருமகனும், நிர்மலாவின் பாசமிகு கணவரும், சநாதநி, கார்த்திகாஜினி ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவகாமசுந்தரி, விஜயேந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான மகாலிங்கம், மனோகரன் மற்றும் றோகினி, சரவணபவானந்தன் (செல்லப்பா), சித்திரா, சுபத்திரா, ஸ்ரீதரன், குணசேகரன் ஆகியோரின் மைத்துனரும், மயூரன், ஜெய்ராம் ஆகியோரின் மாமனாரும், யர்ஸ்வின், திகழ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.06.2024) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 09.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி பிராமண உயரப்புலம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கருவப்புலம் ஒழுங்கை,
4ம் உப ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.
(CS/55497) J-1
தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனியமண் அகழ்வுக்கு காணிகள் அபகரிப்பு

## சட்டநடவடிக்கை பாயும்

**மன்னார், ஜூன் 29**

**மன்னார் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் கனியமண் அகழ்வுக்காக காணி முகவர்கள் மூலம் சட்டவிரோதமானமுறையில் காணி அபகரிக்கப்படுவதாக முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. இந்த மோசடி கும்பலுக்கு எதிராகச் சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என்று மன்னார் பொது அமைப்புகளின் ஒன்றியம் எச்சரித்துள்ளது.**

இதுதொடர்பில் மன்னார் பொது அமைப்புகளின் ஒன்றியத்தின் தலைவர் வி.எஸ்.சிவகரன் கூறுகையில்;

சில குழுக்கள் அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தியும் அதிகாரத்தை உபயோகித்தும் சாதாரண மக்களின் காணிகளை அபகரிக் கின்றன. முறைகேடான முறையில் உறுதிப்பத்திரத் தயாரிப்புகள் இடம்பெறுகின்றன. அபகரிக்கப்படும் காணிகளை பலகோடி ரூபா பெறுமதிக்கு கனியமண் அகழ்வில் ஈடுபடவுள்ள இலங்கை முகவர் நிறுவனங்களுக்கு விற்பனை செய்யப்படுகின்றன என்று முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. இந்த மோசடி கும்பலுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுப்பதற்குரிய பணிகளில் நாம் ஈடுபட்டு வருகிறோம்- என்றார். (ச-25,56,60)

ஓகஸ்ட் இறுதிக்குள்

# குறிகாட்டுவான் வீதி புனரமைப்பு நிறைவு

யாழ்ப்பாணம், ஜூன் 29

குறிகாட்டுவான் வரையான வீதி எதிர்வரும் ஓகஸ்ட் 31 ஆம் திகதிக்குள் நிறைவடையும் என்று வடக்கு மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

யாழ்.மாவட்டத்தில் தீவகங்களுக்கிடையிலான பிரதான போக்குவரத்து வீதியாக குறிகாட்டுவான் வீதி காணப்படுகின்றது. குறித்த வீதியின் ஒரு பகுதியைத் தற்காலிக காப்பெற் வீதியாக் மாற்றுவதற்காக வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் 250 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

அதேவேளை மேலதிக வீதிப் புனரமைப்புக்கு 250 மில்லியன் ரூபா செலவினமாக தேவைப்படுகின்றது. அத்துடன் குறிகாட்டுவான் இறங்குதுறையின் புனரமைப்புக்குரிய நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-125)

நல்லூர் கந்தன் திருமண சேவை

எம்மிடம் சகலவிதமான மணமக்கள் உண்டு உங்கள் விருப்பத்திற்கு ஏற்றவாறு விரைவாக ஒழுங்கு செய்து தரப்படும்.

தொடர்புகளுக்கு: வி.ஜெயந்தி

077 973 3183

# ஊர்காவற்றுறை - காரைநகர் அதிகரிக்கப்படும் படகுச்சேவை

யாழ்ப்பாணம், ஜூன் 29

ஊர்காவற்றுறை மற்றும் காரைநகர் இடையிலான படகுச் சேவை எதிர்வரும் திங்கட்கிழமை முதல் அதிகரிக்கப்படவுள்ளதாக வடமாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் குறூஸ் உதயனுக்குத் தெரிவித்தார்.

இதுவரைகாலமும் ஊர்காவற்றுறை - காரைநகர் இடையே 11 சேவைக்ள் மாத்திரமே இடம்பெற்ற நிலையில் ஊர்காவற்றுறை பிரதேச செயலாளரால் பொதுமக்களின் அடிப்படைத் தேவைகள் கருதி முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக இவ்வாறு போக்குவரத்துச் சேவை அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, எதிர்வரும் திங்கட்கிழமை தொடக்கம் காலை 6.25, காலை 6.55, காலை 7.30, காலை 8, காலை 8.30, மு.ப.10, மு.ப. 11, மதியம் 12.15, மதியம் 1.50, பி.ப. 3.15, பி.ப. 4.30, மாலை 5, மாலை 5.30 ஆகிய நேரங்களில் இந்தச் சேவைகள் இடம்பெறவுள்ளன.

சனிக்கிழமைகளில், காலை 6.50, காலை 8, மதியம் 12.15, பி.ப. 4.30 ஆகிய நேரங்களில் படகுச் சேவைகள் இடம்பெறவுள்ளன. (ம-125)

# பிரச்சினைக்குத் தீர்வு அடக்குமுறையல்ல

## ஐ.ம.சக்தி தெரிவிப்பு

சம்பள முரண்பாட்டுக்குத் தீர்வை வழங்குவதற்குப் பதிலாக, பொலிஸ் தாக்குதல்கள் மற்றும் அதிபர், ஆசிரியர் சேவையை அத்தியாவசிய சேவையாக்குவது போன்ற அழுத்தங்களை விடுப்பது பிரச்சினையை மேலும் சிக்கலாக்கும். அடக்குமுறையை ஆயுதமாகப் பயன் படுத்துவதை அரசாங்கம் நிறுத்தவேண்டும் -இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

கல்வித்துறையில் ஏற்பட்டுள்ள தொழில்சார் பிரச்சினைகளால் நாட்டின் எதிர்காலம் பெரும் நெருக்கடிக்குள்ளாகியுள்ளது. கல்வித்துறையில் நிலவிவரும் தொழில் வல்லுநர்களின் சம்பளம் உள்ளிட்ட பிரச்சினைக ளுக்குத் தீர்வு காண்பது அரசின் முழுப் பொறுப்பாகும்.

நாட்டின் உண்மையான பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை வழங்காது அரசாங்கம் அடக்குமுறை யைப் பிரயோகிக்க முயல்கின்றது. கல்விப் பிரச்சினைகளை அரசியலுக்குள் கொண்டு வந்து நாட்டின் எதிர்காலத்தை சீரழிப்பதை ஏற்கமுடியாது.

நாட்டின் எதிர்காலச் சந்ததியினர் குறித்து சிந்தித்து அனைவரும் பொறுப்புணர்வுடன் செயற்படவேண்டும்- என்றார். (ச-25)

## கேள்வி அறிவித்தல்

## சபைநிதி -2024

## புதுக்குடியிருப்பு பிரதேசசபை, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு, வட மாகாணம்.

01. சபைநிதி 2024 மூலமான அபிவிருத்தி ஒதுக்கீட்டின் ஒரு பகுதி கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட திட்டங்களிற்காக பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.
02. தலைவர், பிரதேசசபை பெறுகைக்குழு, புதுக்குடியிருப்பு **பிரதேசசபை** கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைக்காக தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கோருகின்றார்.
03. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது. ஆயினும் வடமாகாண நிர்வாக எல்லைக்குள் பதிவுசெய்யப்பட்ட கேள்விதாரர்களுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
04. கேள்வி பெற தகுதியுடையவராவதற்கு வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையிற் காட்டியபடி பொருத்தமான C6/ C5 தரத்தில் கட்டட அமைப்பிற்கான CIDA பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.
05. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.
06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தலைவர், பிரதேசசபை பெறுகைக்குழு **புதுக்குடியிருப்பு (தொலைபேசி: 021 229 1023 e.mail – pkipsmullai@gmail.com)** இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் காலை 09.00 மணிமுதல் மாலை 15.00 மணி வரை 11.07.2024 வரையிலான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.
07. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் தலைவர், பிரதேசசபை பெறுகைக்குழு, புதுக்குடியிருப்பு எனும் இடத்திலிருந்து 29.06.2024 ம் திகதியிலிருந்து 11.07.2024 ம் திகதி வரை காலை 09.00 மணிக்கும் மாலை 15.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா. 3000.00 **(வரி நீங்கலாக)** செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.
08. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து தலைவர், **பிரதேசசபை பெறுகைக்குழு புதுக்குடியிருப்பு பிரதேசசபை, புதுக்குடியிருப்பு** எனும் முகவரிக்கு 12.07.2024 ம் திகதி மாலை 02.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்விநேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் புதுக்குடியிருப்பு பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் திறக்கப்படும்.
09. கேள்வியானது கேள்வி சமர்ப்பிக்கும் இறுதித் திகதியிலிருந்து 77 (27.09.2024) நாட்கள் வரை செல்லுபடியாகும்.
10. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும். இத் தொகையினை வங்கிப் பிணையாக மாத்திரம் செலுத்த முடியும்.

| ஒப்பந்த இலக்கம் | வேலை விபரம் | மதிப்பீட்டு தொகை (மில் ரூ) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் (கட்டடம்) | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணைவைப்பு (ரூபா) | செல்லுபடியாகும் காலம் |
| NP/14/44(04)/Coun/Dev/W-05/2024 | Construction of Shopping Units in Puthukkudiyiruppu Public Market | 10.25 | 98 நாட்கள் | C6/C5 | 110,000.00 | 25/10/2024 |

11. கேள்விகள் திறப்பதற்கான முன்னோடிக் கூட்டம் புதுக்குடியிருப்பு பிரதேசசபை, புதுக்குடியிருப்பு அலுவலக கட்டடத்தில் 03.07.2024 அன்று மாலை 02.30 மணிக்கு நடைபெறும். இக் கூட்டத்தில் ஆர்வமுள்ள ஒப்பந்தகாரர்கள் தமது சொந்தச்செலவில் கலந்து கொள்ள முடியும்.
12. சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளை முழுமையாகவோ அல்லது பகுதியாக நிராகரிக்கவோ, மீள்கேள்வி கோரவோ பெறுகைக்குழு தலைவருக்கு அதிகாரம் உண்டு.

**தலைவர்,**
**பிரதேசசபை பெறுகைக்குழு**
**புதுக்குடியிருப்பு பிரதேசசபை,**
**புதுக்குடியிருப்பு.**
**29.06.2024**

(cr42733) (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கையிலும்...

வெளிநாட்டைச் சேர்ந்த நபரொருவருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையிலேயே அவருக்குப் பறவைக் காய்ச்சலை ஏற்படுத்தும் ஏவியன் இன்புளுவன்சா தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.
உலகளவில் தற்போது பறவைக்காய்ச்சல் தொற்று தீவிரமாகி வருகின்றது. அமெரிக்கா, கனடா, பிரேசில் போன்ற நாடுகளில் இந்த வருடத்தின் ஆரம்பத்தில் அவதானிக்கப்பட்ட பறவைக்காய்ச்சல் தொற்று, கடந்த இரு மாதங்களின் முன்னர் இந்தியா, ஜப்பான் மற்றும் தென்கொரியா போன்ற ஆசிய நாடுகளிலும் தீவிரமாகப் பரவியிருந்தது. குறிப்பாக இந்தியாவின் கேரளா மற்றும் கர்நாடகா மாநிலங்களில் தொற்றின் தீவிரம் அதிகரித்துள்ளதால், இலங்கையிலும் இந்தத் தொற்றுப் பரவலாம் என்ற எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டிருந்தன. இவ்வாறானதொரு பின்னணியிலேயே, தற்போது 'இன்புளுவன்சா' தொற்றுடன் ஒருவர் அடையாளம் காணப்பட்டுள்ளார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
தொற்று நிலைமை தீவிரமாகும் பட்சத்தில், பல்லாயிரம் பறவைகள் மற்றும் விலங்குகள் கொல்லப்படுவதற்கு இந்தத் தொற்று காரணமாக அமையும். ஆதலால், இன்புளுவன்சா தொற்று தீவிரமாகும் பட்சத்தில் அது இலங்கையில் பொருளாதாரப் பாதிப்புகளை மிகையாக ஏற்படுத்தும் என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது. (அ-ம)

## படுகொலைகளின்...

இலங்கையின் பொருளாதார நிலைமையைச் சீர்ப்படுத்தத் தவறியிருந்தால், இலங்கையின் நிலைமையும் அவ்வாறுதான் இருந்திருக்கும் என்று ஜனாதிபதி ரணில் தெரிவித்தார்.
ஜனாதிபதி சுற்றாடல் விருது வழங்கும் விழா, கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த நினைவு மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது. இதன்போதே ஜனாதிபதி ரணில் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
இலங்கையில் டிஜிற்றல் மற்றும் பசுமைப் பொருளாதாரத்தைக் கட்டமைக்க அர்ப்பணிப்புடன் செயற்படுகிறோம். அதனுடன் விவசாய நவீனமயமாக்கல் திட்டத்தையும் செயற்படுத்தியுள்ளோம். இந்தத் திட்டத்தை இப்போதிருந்தே ஆரம்பித்து 2048 ஆம் ஆண்டுக்குள் அதற்குரிய இலக்குகளை அடைந்துகொள்ள வேண்டும். பொதுவாக உலகில் இந்த இலக்குகள் 2050 ஆம் ஆண்டுக்குள் எட்டப்படவேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது. ஆனால், 2050 ஆம் ஆண்டுக்கு முன்னதாகவே நாம் குறித்த இலக்கை நோக்கி நகரமுடியும்.
அதேபோன்று, இந்தத் திட்டத்தை முன்னெடுத்துச் செல்ல பசுமை நிதியியல் மற்றும் பசுமைப் பிணைமுறிகள் தேவை. அப்போது இது பொருளாதாரத் திட்டத்தில் இணைக்கப்படும். இந்த இலக்குகளை நாம் அடையவேண்டும். இன்று உலகம் முழுவதையும் அவதானித்து இந்தப் பணிகளைச் செய்து வருகிறோம்.
காலநிலை மாற்றத்தை எந்தவொரு நாடும் தனியே எதிர்கொள்ளமுடியாது. அதற்காக அனைத்து நாடுகளும் இணைந்து செயற்படவேண்டும். ஆனால், இந்த திட்டத்தை நாம் ஆரம்பித்தாலும், சில மேற்கு நாடுகள் அதிலிருந்து விலகி இருக்கின்றன. அன்று இங்கிலாந்து பிரதமர் பொரிஸ் ஜொன்சன் கிளாஸ்கோ பிரகடனத்தை வெளியிட்டார். ஆனால் இன்று பிரித்தானிய அரசாங்கம் அதனைவிட்டு வெளியேற முயல்வதை ஒரு சிறந்த உதாரணமாகச் சுட்டிக்காட்டலாம். இந்த விடயத்தில் அமெரிக்காவின் முடிவை நவம்பரில் நடைபெறும் தேர்தலுக்குப் பிறகுதான் தெரிந்துகொள்ள முடியும்.
கடன் மறுசீரமைப்புத் தொடர்பில் இலங்கை தற்போது முதல் படியை எடுத்துள்ளது. அதன்படி, நாம் வங்குரோத்து நிலையில் இருந்து மீண்டுள்ளோம். இப்போது பொருளாதார மாற்றச் சட்டத்தை நிறைவேற்றி அந்தப் பயணத்தை மேற்கொள்ளவேண்டும். ஆனால் ஆபிரிக்கா போன்ற நாடுகள் அந்த செயன்முறையைச் செய்வது கடினம். எனவே, அவர்களுக்கு நிவாரணம் வழங்கவேண்டும். குறிப்பாக ஆபிரிக்க நாடுகளின் கடன்களை முழுமையாகத் தள்ளுபடி செய்ய இலங்கை காலநிலை மாற்ற மாநாட்டில் முன்மொழிந்தது.
காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ள நிதி ஒதுக்கீடுகள் அவசியம். இதற்குத் தேவையான பணம் இது வரை கிடைக்கவில்லை. ஆனால் மேற்கத்திய நாடுகள் சுமார் 100 பில்லியன் டொலர்களை உக்ரைன் போரிலும் காஸா போரிலும் செலவு செய்துள்ளன. ரஷ்யா எவ்வளவு செலவழித்தது என்பது எங்களுக்குத் தெரியாது. இந்தப் பணத்தை ஆபிரிக்க நாடுகளுக்கும், ஏனைய நாடுகளுக்கும் வழங்கினால், சிறந்த மாற்றத்தை ஏற்படுத்தலாம்.
போர் செய்து பயனில்லை. உக்ரைனில் போரை நிறுத்துமாறு நாங்கள் கோருகிறோம். காஸாவில் போரை நிறுத்துங்கள். அந்தப் போரை நிறுத்தி 5 வருடங்களில் பலஸ்தீன அரசை உருவாக்குங்கள். அதேபோன்று, இஸ்ரேலின் பாதுகாப்புக் குறித்தும் நடவடிக்கை எடுங்கள்.
ஆனால் இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையானது அது பற்றிய உலகின் தெற்கில் குரல் எழுப்புவதாகும். இந்தப் போரை நிறுத்தி ஆபிரிக்க நாடுகளுக்கு உதவுமாறு கேட்டுக்கொள்கிறோம். இந்த நாட்களில் கென்யாவில் நடந்த கலவரங்களைப் பார்த்தோம். தற்போது சுமார் 20 பேர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். ஒரு நாட்டின் பொருளாதாரத்தை சீர்செய்யவில்லை என்றால் ஏற்படும் நிலைதான் இது. இலங்கையின் பொருளாதாரத்தை உறுதிப்படுத்தாது இருந்திருந்தால் இவ்வாறான நிலையே ஏற்பட்டிருக்கும் - என்றார். (அ-ம)

## யாழ்ப்பாணத்தை...

யாரிடம் கையளிப்பது என்ற கேள்வி காணப்பட்டது அப்போது பொன்சேகாவை நானே பரிந்துரைத்தேன் என்று ஜனாதிபதி ரணில் தெரிவித்தார்.
பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவால் 'இராணுவ தளபதி தேசத்துக்கு வழங்கிய வாக்குறுதி: இந்த யுத்தம் அடுத்த தளபதி வரையில் நீடிக்க இடமளியேன்' என்ற தலைப்பில் எழுதப்பட்ட நூல் வெளியீட்டு விழா ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கொழும்பில் நேற்று இடம்பெற்றது. இதன்போதே ஜனாதிபதி ரணில் இவ்வாறு தெரிவித்தார்.
'பீல்ட் மார்ஷல் அந்தஸ்தை சரத் பொன்சேகா மட்டுமே வகிக்கிறார். அவர் யுத்த சவால்களை வெற்றிக்கொண்ட அதேநேரம் அதற்கு வெளியில் அரசியல் சவால்களுக்கும் முகம்கொடுத்திருந்தார். குறிப்பாக யாழ்ப்பாணத்தில் ஜெயசிக்குறு இராணுவ நடவடிக்கை தோல்வியைத் தழுவியதால் இராணுவம் கைப்பற்றிய பலவற்றை இழக்க நேரிட்டது. அந்த நேரத்தில் நான் பிரதமராகப் பதவி வகித்ததோடு, யாழ்ப்பாணத்தை யாரிடம் கையளிப்பது என்ற கேள்வி காணப்பட்டது. அப்போது பலர் இறந்து போயிருந்ததோடு, காயங்களுக்கும் உள்ளாகியிருந்ததால் படையினரின் எண்ணிக்கை குறைந்திருந்தது. யாழ்ப்பாணத்துக்கான படைப்பிரிவொன்று அவசியமென சிலர் கூறினர். அப்போது நான் சரத் பொன்சேகாவிடம் யாழ்ப்பாணத்தை ஒப்படைப்போம் என இராணுவத் தளபதியிடம் கூறினேன். அதன்படியே செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.
அவர் வீழ்ந்த இடத்தில் எழுந்து யுத்த வெற்றியை நோக்கி நகர்ந்தார். அதற்காக கஷ்டமான தீர்மானங்களை எடுக்கவேண்டியிருந்தது. யுத்தம் என்பது கிரிக்கட் போட்டியை போன்றதல்ல. உயிரிழப்புகள் ஏற்படும். சொத்துகள் இழக்கப்படும். அதற்கு மத்தியிலும் யுத்தத்தை வழிநடத்திச் செல்லும் வல்லமை அவரிடம் இருந்தது.
உலகத்தில் மிகமோசமான யுத்தமொன்றுக்கே நாம் முகம்கொடுத்தோம். மற்றைய நாடுகளில் இன்றும் அவ்வாறான யுத்தங்கள் காணப்படுகின்றன. ஆப்கானிஸ்தான் யுத்தம் இலங்கைக்கு முன்னதாக ஆரம்பமானது. அந்த வகையில் சரத்பொன்சேகா தனது பொறுப்பை சரிவர செய்திருக்கிறார்.
அதேபோல் சிவில் வாழ்க்கையிலும் அவர் பல சவால்களை எதிர்கொண்டிருக்கிறார். அதன்போது அவர் தனிமைப்பட்ட வேளைகளிலும், சிறையிடப்பட்ட வேளையிலும் வலுவான மனிதராக உருவாகினார். அதனால் நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவோடு கலந்துரையாடி சரத் பொன்சேகாவுக்கு பீல்ட் மார்ஷல் அந்தஸ்த்து வழங்கப்பட்டது. அதற்குத் தகுதியானவர் என்ற வகையில் அவரும் ஏற்றுக்கொண்டார்.
அரசாங்கம் என்ற வகையில் சரத் பொன்சேகாவின் தெரிவைக் கொண்டு நாம் பயனடைந்தோம். அவர் போராட்டக்குணம் கொண்டவர். யுத்த களத்திலும் அரசியல் களத்திலும் போராட்டத்தைக் கைவிடவில்லை. அவரால் நாட்டுக்கு இனியும் சேவையாற்றமுடியும். அவரின் சேவைகளை நாம் பெற்றுக்கொள்ள வேண்டியது அவசியம் - என்றார். (அ-ம-26)

## பஸ்...

வெள்ளிக்கிழமை பஸ் சங்கங்களைச் சேர்ந்தவர்களுக்கும், தேசியப் போக்குவரத்து ஆணைக்குழுவின் அதிகாரிகளுக்கும் இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே இதுதொடர்பான தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. இதேவேளை - புதிய பஸ் கட்டணத் திருத்தத்தின் பிரகாரம் குறைந்தபட்ச பஸ் கட்டணமாக 28 ரூபா அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம-66)

## வன்முறையாளி...

ளார். கைதுசெய்யப்பட்டவர் 24 வயதுடையவர் என்றும், அவரிடமிருந்து சொகுசுக் கார், மோட்டார்சைக்கிள், 2 வாள்கள் மற்றும் உள்ளூர்த் தயாரிப்பு வெடிகுண்டு என்பன மீட்கப்பட்டுள்ளன. கைதான நபர் யாழ்ப்பாணத்தில் வீடொன்றினுள் அத்துமீறி நுழைந்து தாக்குதல் மேற்கொண்டமை, வாகனங்களுக்குத் தீ வைத்தமை, நெல்லியடிப் பகுதியில் புடைவைக்கடை ஒன்றிற்குப் பெற்றோல் குண்டு வீசியமை உள்ளிட்ட பல்வேறு வன்முறைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர் எனப் பொலிஸார் தெரிவித்தனர். இவர் வெளிநாட்டிலுள்ள நபரொருவரிடமிருந்து பணம் பெற்று வன்முறையில் ஈடுபட்டு வந்த வன்முறைக் கும்பலைச் சேர்ந்தவர் எனவும் பொலிஸார் குற்றஞ்சாட்டியுள்ளனர். அவர் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டதையடுத்து எதிர்வரும் 14 ஆம் திகதிவரை மறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (அ-ம-66-26-125)

## நாமல்...

வுக்கான இலங்கையின் முன்னாள் தூதுவர் உதயங்க வீரதுங்க தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
"மஹிந்த ராஜபக்சவின் ஆலோசனையின் பிரகாரம் விமல் வீரவன்ஸவைச் சந்தித்துப் பேச்சு நடத்தினேன். இப்போது விமல் தரப்பு தனிவழி சென்றாலும் ஜனாதிபதித் தேர்தலில் அவர்களின் ஆதரவு பொதுஜன பெரமுனக் கட்சிக்கே கிடைக்கும்.
வாசுதேவ நாணயக்காரதான் எமது பக்கம் முதலில் வருவார். பின்னர் கம்மன்பிலவும் எமது பக்கமாக வரவேண்டியிருக்கும். திலிப் ஜயவீரவும் கோத்தாபய ராஜபக்சவுடன்தான் இருக்கின்றார். இன்னும் இரு வாரங்களில் இவையெல்லாம் நடக்கும். அதேவேளை, ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் பொதுத்தேர்தல் நடக்கும் என நான் இன்னும் நம்புகின்றேன். அவ்வாறு நடந்தால் தம்மிக்க பெரேரா அல்லது நாமல் ராஜபக்ச ஆகியோரில் ஒருவர் கம்பஹா மாவட்டத்தில் களமிறங்குவார்கள்" - என்றார். (அ-ம-44)

## கொக்குத்தொடுவாய்...

டையவை என்று கருதப்படும் இலக்கத் தகடுகள் என்பனவும் மீட்கப்பட்டன.
மூன்றாம் கட்ட அகழ்வுப் பணிகள் இந்த வருடம் மார்ச்மாதம் முன்னெடுக்கப்படும் என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டது. ஆனால், நிதியின்மையால் அகழ்வுப் பணிகள் பிற்போடப்பட்டுவந்த நிலையில், தற்போது மூன்றாம்கட்ட அகழ்வுப் பணிகள் முன்னெடுக்க ஏற்பாடுகள் முழுமை பெற்றுள்ளன என்றும் ஜூலை மாதம் 4 ஆம் திகதி அகழ்வுப் பணிகள் ஆரம்பமாகவுள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
முன்னதாக, கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழியில் மீட்கப்பட்ட எச்சங்கள் 1994 ஆம் ஆண்டு தொடக்கம் 1996 ஆம் ஆண்டுவரையான காலப்பகுதிக்குரியவை என்று முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தில் இடைக்கால அறிக்கை தாக்கல் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## கொடுப்பனவு...

இதற்கமைய 15 ஆயிரம் ரூபாவாகக் காணப்பட்ட கொடுப்பனவை 25 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதுதொடர்பான சுற்றறிக்கை ஒன்றும் வெளியிடப்பட்டுள்ளது. (அ-ம-66)

## ஹெரோய்னுடன்...

மில்லிகிராம் ஹெரோய்னும் மீட்கப்பட்டுள்ளன. சங்கானைப்பகுதியில் வைத்து ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன் அவரிடமிருந்து 140 மில்லிகிராம் ஹெரோய்ன் மீட்கப்பட்டுள்ளது. மூவரும் நீதிமன்ற உத்தரவுக்கு அமைய ஏழு நாட்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (அ-ம-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதியின் நற்செய்தி மக்களுக்கான மிரட்டலே!

## சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவிப்பு



**யாழ்ப்பாணம், ஜூன் 29**

**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையூடாக மக்களுக்கு மறைமுகமாக ஒருவகையான மிரட்டலையே விடுத்துள்ளார் என்று ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்; நான் ஒருவனேதான் இந்த நாட்டின் பொருளாதாரத்தைச் சீர்செய்யமுடியும். நான் தனியொரு ஆளாகச் சாதித்திருக்கின்றேன். நான் இல்லாவிடில் இந்த நாடு மீளவும் வங்குரோத்து நிலைக்குப் போய்விடும்.

ஆகவே, மக்கள் ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்கும்போது யாருக்கு வாக்களிக்கவேண்டுமென்பதை யோசித்து வாக்களியுங்கள் என்ற அடிப்படையிலேயே அவரது உரையின் சாராம்சம் அமைந்துள்ளது. இது மக்களை மிரட்டும் செயற்பாடாகவே அமைகிறது.

இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாக 1800க்கும் மேற்பட்ட மருத்துவர்கள் மற்றும் ஆசிரியர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர். தற்போதும் வெளியேறிக் கொண்டிருக்கின்றனர். இவ்வாறான தொரு சூழலில் பொருளாதாரத்தில் நாங்கள் ஏற்றம் கண்டிருக்கின்றோம் என்று ஜனாதிபதி எவ்வாறு கூறமுடியும்? - என்றார். (ச-66-20)

## கிரிக்கெட் இன்று

இலங்கை பொறியியலாளர் நிறுவனம் வடக்கு பொறியியலாளர்களுக்கு இடையில் வருடந்தோறும் நடத்தும் வடக்கு பொறியியலாளர்கள் பிறீமியர் லீக் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

8 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட இந்த கிரிக்கெட் சுற்றுப் போட்டி இன்று சனிக்கிழமை காலை 8 மணி முதல் மட்டுவில் வளர்மதி விளையாட்டு மைதானம் மற்றும் மட்டுவில் மகா வித்தியாலய மைதானம் ஆகியவற்றில் நடைபெறும். அன்றைய தினமே அரையிறுதி, இறுதிப் போட்டிகளும் நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-26)


### காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், முனிஸ்வரன் வீதியிலுள்ள குளி 3 (தற்போது அளப்பனவு செய்யப்பட்டபடி 12 அடி அகலமும் 60 அடி நீளமும் உடையது) விஸ்தீரணமுடைய வியாபார நிலையமாகப் பாவிக்கப்படக் கூடிய காணி விற்பனைக்கு உண்டு.

(CS/55526) J-1

தொடர்புகளுக்கு:- 076 695 7650

### கோப்பாய் அகரம் மருந்தகத்திற்கு மருந்தாளர் & மருந்தக உதவியாளர் தேவை

SLMC Registered மருந்தாளர் முழுநேரமாக பணியாற்ற தேவை.

சம்பளம் 80000/-

**அனுபவம் உள்ள மருந்தக உதவியாளர் தேவை.**

வேலை நேரம் 2.00 Pm - 10.00 pm

திறமையின் அடிப்படையில் சம்பளம் வழங்கப்படும்.

(CR/42734) J-1

தொடர்பு:- 0766357360

### வேலையாள் தேவை

பருத்தித்துறை அல்வாய் வடமேற்கில் வீட்டு வேலை பார்ப்பதற்கும், 4 வயது குழந்தையை பராமரிப்பதற்கும் தங்கி நின்று வேலை பார்க்கக் கூடிய **வேலையாள் தேவை.**

(சம்பளம் - 35,000 பேசித் தீர்மானிக்கலாம்.)

(CS/55528) J-1

077 078 4411, 075 078 4466

### கடை வாடகைக்கு

கல்வியங்காடு பிரதான வீதியில் கடை வாடகைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:

(CS/55507) J-1

077 175 0746, 077 806 9790

### காணி விற்பனைக்கு உண்டு

யாழ். நாயன்மார்கட்டு சந்திக்கு அருகாமையில் 3 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 077 930 8363
077 545 3785

(CS/55483) J-1

### மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவகுலம் (V), 1985 இல் பிறந்த, கனடாவை வசிப்பிடமாகக் கொண்ட (Canadian Citizen) ரோகிணி நட்சத்திரம் உடைய விவாகரத்து பெற்ற மணமகனுக்கு மணமகள் தேவை.

(CS/55470) J-1

075 538 9986 /077 360 5714

### கடையிற் சுவாமிகள் சமாதிக் கோயில்

### அலங்காரத் திருவிழா விஞ்ஞாபனம் தொடர்பான ஓர் அறிவித்தல்

மேற்படி ஆலயத்தின் தர்மகர்த்தா துரைராஜா சிறிகந்தராஜா ஆகிய நான் விடுக்கும் அறிவித்தலாவது குறித்த ஆலயத்தின் தர்மகர்த்தா நானே ஆவேன். எனினும் குறித்த ஆலயத்தில் திரு. லட்சுமணன் ஓங்காரமூர்த்தி எனும் நபர் எவ்வித அதிகாரமும் இல்லாமல் தானே ஆலய நடவடிக்கைகளில் தலையிட்டு வருகிறார். குறித்த விடயம் தொடர்பாக TR / 68 / 2024 எனும் வழக்கு யாழ்.மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் உள்ளது. இச்சந்தர்ப்பத்தில் குறித்த ஆலயத்தின் அலங்காரத் திருவிழா தொடர்பான விஞ்ஞாபனம் ஒன்று **"கடையிற் சுவாமிகள் சிவனடியார்களும், உபயகார அன்பர்களும்"** என குறிப்பிட்டு ஓர் விஞ்ஞாபன பத்திரிகை வெளியிடப்பட்டுள்ளது. இவ் விஞ்ஞாபனத்தை யார் பிரசுரித்துள்ளார்கள் என்பதனை வெளிப்படுத்தாமல் அநாமதேயமாக வெளியிடப்பட்ட அறிவுறுத்தல் தொடர்பாக பொதுமக்கள் அவதானத்துடன் இருக்க வேண்டுமெனவும் ஆலயத்தினுடைய நம்பிக்கை, பொறுப்பான்மை மற்றும் நிதிப்பொறுப்புக் கூறல் தொடர்பாக பல்வேறு நிவாரணங்கள் குறித்த வழக்கில் கோரப்பட்டுள்ள நிலையில் குறித்த ஆலயத்தின் நிதிகளைக் கையாளுகின்ற எந்த நபரும் யாழ். மாவட்ட நீதிமன்றத்தில் பொறுப்புக்கூற வேண்டி வருமென இத்தால் அவதானமாக இருக்குமாறு குறித்த ஆலயத்தின் பரம்பரைத் தர்மகர்த்தா என்ற வகையில் நான் இவ்வறிவுறுத்தலை வெளியிடுகின்றேன்.

**கடையிற் சுவாமிகள் சமாதிக் கோவில்**
**பரம்பரை தர்மகர்த்தா**
**துரைராசா சிறிகந்தராஜா**

### காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் கைதடி சந்தி அருகாமையில்**

**A-9 வீதி முகப்புடன் 10 பரப்பு காணி விற்பனைக்குண்டு.**

- **இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்.**
- **இருபதடிப்பாதை (20).**
- **கைதடிச் சந்தி 100M தூரம்.**
- **சித்த வைத்தியசாலை முன்பாக.**
- **பார்வை நேரம் காலை 6 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை.**
- **காணி கொள்முதல் செய்பவருக்கு பிரதேச சபை அனுமதி பெற்றுக் கொடுக்கப்படும்.**
- **ஒரு பரப்பின் விலை ரூபா. 2000000/= (இருபது இலட்சம் ரூபாய்)**

**Golden Real Estate (pvt) Ltd.**

077-029 4164
077-329 4130
077-294 1521




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 29. 06. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.